# பாட்டாளி சிந்தனை

Volume 25 No. 8 — சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

April 2015 — தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ் — விலை ரூ 3




சிப்தாஸ் கோஷ்

*(எமது அன்பிற்குரிய கட்சியாகிய எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) இன் **67**வது ஸ்தாபக தினத்தை உரிய முக்கியத்துவத்துடன் அனுஷ்டிக்கவிருக்கின்ற இத் தருணத்தில், எமது கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயலாளரும், இச்சகாப்தத்தின் முன்னணி மார்க்சிய சிந்தனையாளர்களில் ஒருவருமான தோழர் சிப்தாஸ் கோஷின் தேர்வு நூல் தொகுதி **2 1992**ம் ஆண்டு பதிப்பிலிருந்து "வகுப்புவாதப் பிரச்சினைகள் குறித்து" என்ற தலைப்பில் அமைந்த கட்டுரையின் **171–184** வரையிலான பக்கங்களில் சில பகுதிகளை மட்டும் தேர்ந்தெடுந்து இங்கே வெளியிடுகின்றோம். மிக அச்சமூட்டும் வகையில் வளர்ந்து வருகின்ற அடிப்படைவாதத்திற்கெதிராகவும், வகுப்புவாத அபாயத்திற்கெதிராகவும் ஒரு தீவிர சித்தாந்தக்–கலாச்சாரப் போராட்டத்தை வளர்த்தெடுக்க எமது தலைவரும், ஆசானும் வழிகாட்டியுமான தோழர் சிப்தாஸ் கோஷ் இக் கட்டுரையில் வழங்கியிருக்கின்ற மதிப்புவாய்ந்த ஆய்வும், வழிமுறையும் என்றென்றும் கலங்கரைவிளக்கெனத் திகழும் என நம்புகிறோம்.)*

# வகுப்புவாதப் பிரச்சினையை நமது நாட்டில் தீர்க்கும் சரியான வழிமுறை சமூகக் கலாச்சாரப் புரட்சியின் மூலம் சமுதாயத்தை ஜனநாயகப்படுத்துவதுதான்

**– தோழர் சிப்தாஸ் கோஷ்**

*"...வகுப்புவாதத்தைக் கடுமையாகக் கண்டிக்கும். பல்வேறு வகுப்பினரிடையே நல்லிணக்கம், நட்புணர்வு மற்றும் அதன் நன்மைகளைப் புகழ்ந்துரைக்கும் மேடைப் பேச்சுக்கள் மூலமும் வகுப்புவாதம் மற்றும் வகுப்புவாத வன்முறைப் பிரச்சினை தீர்க்கப்பட முடியுமெனில் நம் நாட்டில் இது எப்போதோ தீர்க்கப்பட்டிருக்கும். பெரும்பாலான இந்திய மக்களின் கேள்விக்கிடமற்ற நம்பிக்கையைப் பெற்றிருந்த தேசபந்து சித்தரஞ்சன், மகாத்மா காந்தி மற்றும் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் போன்ற மாபெரும் மனிதர்களெல்லாம் வகுப்புவாதத்தையும் வகுப்புவாத வன்முறையையும் கண்டிக்கவில்லையா? இங்கு வாழும் பல்வேறு வகுப்பினரிடையே, அமைதியையும் நல்லிணக்கத்தையும் பேணுவதன் அவசியத்தை வலியுறுத்தவில்லையா? ஆயினும் இந்த வலுவான கூக்குரல்களின் இறுதி விளைவுதான் என்ன? அவர்கள் காலத்தோடு ஒப்பிட்டால் நமது இலக்கை நோக்கி ஓர் அங்குலம்கூட நாம் முன்னேறவில்லை. வகுப்புவாதம் நம் மக்களை தனது பயங்கரப் பிடிக்குள் வைத்துக் கொண்டு இன்னும் தொடர்கிறது. முன்பு போலவே சிறிது தூண்டப்பட்டாலும், அருவருக்கத்தக்க வடிவங்களில் அது தன்னை வெளிப்படுத்திவருகிறது...*

*...பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் தங்களுடைய காலனி ஆதிக்கத்தையும் பொருளாதார நலன்களையும், தொடர்வதற்கு பிரித்து ஆளும் கொள்கையை நம் நாட்டில் கடைபிடித்து, வேண்டுமென்றே தேசிய வாத இயக்கத்திற்கு எதிராக முஸ்லீம் மக்களை நிறுத்தினர் என்பதை நானறிவேன். சந்தேகத்திற்கிடமின்றி இது உண்மையே. ஆனால் பர்மாவிலும் கூட, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் இதே பிரித்தாளும் கொள்கையைக் கடைபிடிக்கவில்லையா? இந்தோனேசிய மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் போது டச்சு ஏகாதிபத்தியவாதிகள் இந்தியாவில் இருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களுக்கு சற்றும் பின்தங்கிவிடாமல், அங்கும் மக்கள் ஒற்றுமையைக் குலைக்கச் செயல்பட்டார்கள் என்பது உண்மையல்லவா? இவ்வாறிருக்க அவ்வப்போது வகுப்புக் கலவரங்களை ஏற்படுத்தி, முஸ்லீம் மக்கள் தனிநாடு கோரி, இறுதியில் மத அடிப்படையில் நாட்டை பிரிவினைக்கு இட்டுச் சென்ற இவ்விநோதமான வகுப்புவாதப் பிரச்சினையை இந்தியா எதிர்கொள்வதின் காரணமென்ன? இந்தியாவில் இவ்விநோத சூழ்நிலைக்கு ஒரே காரணம் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் பிரித்தாளும் கொள்கை மட்டுமே என மேம்போக்காக விளக்க முற்படுவது உண்மையில் நம்மை நாமே ஏமாற்றிக்கொண்டு, நமது தேசிய விடுதலைப் போராட்டம் முழுவதிலும் நிலவி வந்த சில அடிப்படைப் பலவீனங்களை ஏற்றுக்கொள்ள மறுப்பதாகும்.*

*சரியான செயல்முறைப்போக்கில் நம் நாட்டின் தேசிய விடுதலை இயக்கத் தலைமையின் தன்மையில் தான் இத்தோல்விக்கான காரணம் பொதிந்துள்ளது. நமது தேசியவாத வரலாற்றியலாளர்களில் சிலர் எவ்வளவுதான் உரத்துக் கூறினாலும் அதற்கு மாறாக பிரிட்டிஷ் சகாப்தத் திற்கு முந்தைய இந்தியா அரசியல்ரீதியில் ஒரே அமைப்பாக ஒரு போதும் இருந்ததில்லை என்பதே அசைக்க முடியாத உண்மையாகும். உண்மையில் அப்போது மிகப்பெரிய எண்ணிக்கையில் தனித்தனி சிற்றரசுகள்தான் இருந்து வந்தன. மத்தியப்படுத்தப்பட்ட பிரிட்டிஷ் நிர்வாகக் கால கட்டத்தின் போதுதான் இந்தியா அரசியல்ரீதியாக ஒருங்கிணைந்த ஒரு நாடாக ஆயிற்று. அதுவரை இல்லாதிருந்த நவீன அகில இந்திய கோட்பாடு உதித்தெழுவதற்கான, புறவய சூழ்நிலையை படிப்படியாக அது உருவாக்கிற்று. இந்தியாவில் மத்தியப்படுத்தப்பட்ட பிரிட்டிஷ் நிர்வாகத்தின் போது ஒரு தேசியசந்தை உருவானதும், அகில*

*தொடர்ச்சி 2ம் பக்கம்*

## மத்திய பட்ஜெட் 2015

# அப்பட்டமாக மக்கள் விரோதமானது, முதலாளித்துவ ஆதரவானது

***2015 – 2016*** *ஆம் ஆண்டுக்கான தனது மத்திய பட்ஜெட்டை அறிமுகப்படுத்துவதற்கு முன்பாக, பாஜகவின் மத்திய நிதி அமைச்சர் அருண்ஜேட்லி 'வளர்ச்சியை முடுக்குவதாற்கான முதலீட்டை அதிகப்படுத்தி வளர்ச்சியின் பலன்களை வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவேண்டிய நிலையில் இருக்கும் சாமானிய ஆண்களுக்கு, பெண்களுக்கு, இளைஞர்களுக்கு, மற்றும் குழந்தைகளுக்கு வழங்குவதற்கான பாதையை வகுத்திருக்கிறேன்' என்று கூறினார். சமீபத்திய எல்லா அரசாங்கங்களும், ஒவ்வொரு அரசாங்கமும் பயன்படுத்தும் வார்த்தை ஜாலங்கள்தான் இந்த எல்ல வார்த்தைகளும் என்றபோதிலும், இந்த முறை அவர் வகுத்திருக்கும் பாதை என்பது தொழிற்குழுமங்கள், கார்ப்பொரேட் துறைகள், தொழில் பெருமுதலைகளின் முடுக்கிவிடப்பட்ட வளர்ச்சியையே வெளிப்படையாக, அப்பட்டமாக, இருக்கிறது. இதோடு கூடவே, சாமானிய உழைக்கும் மக்களின் வாழ்க்கையை மேலும் நாசகரமாக்குவதற்காக அவர்களைக் கசக்கிப் பிழிந்து மேலும் வறியவர்களாக்குவதற்கான பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட திட்டமும் உள்ளது. நாட்டுமக்களைக் கொள்ளையடித்து தனது கட்சியை ஆட்சி அதிகாரத்திற்குக் கொண்டு வந்த ஆளும் ஏகபோகங்களின் பையை நிரப்புவதற்கான திட்டத்தை பாஜக வின் நிதி அமைச்சர் எப்படி வகுத்திருக்கிறார் என்பதை தற்போது பார்ப்போம்.*

### மக்களின் கண்ணோட்டத்திலிருந்து

*தற்போது நாட்டு மக்கள் பெருவாரியாகச் சந்திக்கும் பிரச்சினை என்ன? அடிப்படை உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விண்ணை முட்டும் விலை உயர்வு, பெருகிவரும் வேலையின்மை, வேலை இழப்பு அதிகரிப்பு, வறுமை அதிகரிப்பு, உயிர்வாழ்வதற்குக் கூட தேவையான வருவாய் இல்லாத அளவிற்கு வருவாய் இழப்பு, பட்டினிச் சாவுகள் அதிகரிப்பு, அதிலும் குறிப்பாக தாங்கள் உற்பத்தி செய்த விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு போதிய விலை மறுக்கப்படுவதால் வறுமைக்கு ஆளாகி தற்கொலை செய்யும் விவசாயிகள், பட்டினிச் சாவுகள் அதிகரிப்பு, நிர்வாகத்தின் அனைத்து மட்டங்களிலும் ஊழல், பொருட்களின் விலைகளை செயற்கையாக உயர்த்துவதற்காக அறநெறி தவறிய வியாபாரிகளின் கள்ளச் சந்தை, பதுக்கல்கள், எரிபொருட்களின் விலை உயர்வு பெரு முதலாளிகளின் லாப வெறிக்குத் தீனி போடுவதற்காக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்தாலும் அதற்கேற்றவாரு பெட்ரோல், டீசல் விலையைக் குறைக்காமல் இருத்தல், மின்சாரம், ரயில்வே, போக்குவரத்துக் கட்டணங்கள் உயர்வு, குறைந்த பட்ச சுகாதார மருத்துவ வசதி இன்மை, ஆண்டு தோறும் உயரும் கல்விக் கட்டணங்கள், அதோடு முறையான கல்விக்கு வாய்ப்பின்மை, பெண்கள், குழந்தைகள் மீது தொடர்ந்து பெருகிவரும் பாலியல் மற்றும் இதர வன்முறைகள், சமூகத்தில் பெருகிவரும் வன்முறைகளால் பாதுகாப்பின்மை, சுத்தமான குடிநீர் இல்லாமை, இன்னும் இதுபோன்ற பல பிரச்சினைகளே இன்று மக்கள்*

*தொடர்ச்சி 4ம் பக்கம்*

# வகுப்புவாதத்தின் மூலகாரணம் தற்போதைய சமூக, பொருளாதாரக் கட்டமைப்பில்தான் இருக்கிறது

1ம் பக்கத் தொடர்ச்சி

இந்திய மக்களிடையே பரஸ்பர வணிக வியாபார பரிவர்த்தனைகளும், உறவுகளும் உருவாகி வந்ததின் பின்னணியில், ஏகாதிபத்தியவாதிகளை எதிர்த்த இந்திய மக்களின் சுதந்திர போராட்டத்தின் போக்கில் பல்வேறு மொழிகளை பேசக்கூடிய தேசிய இனங்களும் வெவ்வேறு மதங்களை கடைபிடிக்கக்கூடிய பல்வேறு வகுப்பினரும் ஒன்றிணைந்து ஒரு தேசமாக உருவாக்கம் பெறும் போக்கில் இருந்தனர். நம் நாட்டில் இத்தேசிய இயக்கத்தின் தலைமை பாட்டாளி வர்க்கத்தின் கையில் இருந்திருக்குமானால் ஏகாதிபத்தியத்தை முற்றிலும் ஒழிப்பதற்கான வாய்ப்பு மட்டுமின்றி, நாட்டை முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையில் நடத்திச்சென்று, சோவியத் யூனியன், சீனாவைப் போன்று, இங்கும் தேசிய–இன, வகுப்புவாத, இனவாத பிரச்சினைகள் அனைத்தும் ஒரேயடியாக தீர்க்கப்பட்டிருக்க முடியும். ஆனால் நமது இந்திய மக்களின் துரதிர்ஷ்டம் என்னவென்றால், தேசிய விடுதலை இயக்கத்தின் தலைமை, நம் நாட்டு தேசிய முதலாளிகளின் கையில் இருந்ததாகும். இதுவே இந்தியாவின் விநோத சூழ்நிலைக்குக் காரணமாகும்.

...முதலாளித்துவம் ஒரு உலக சமூக சக்தி என்ற முறையில் தனது முந்தைய புரட்சிகர குணாம்சத்தை இழந்து விட்டதோடன்றி, திட்டவட்டமாக எதிர்ப்புரட்சி சக்தியாக மாறிவிட்டபின், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்பகுதியில்தான், இந்தியா ஒரு தேசமாக உருவாகும் போக்கு துவங்கியது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இந்தப் பொதுவான குணாம்சம் தவிர, இந்திய முதலாளித்துவம் தனக்கென்று பிரத்தியேகமான குணாம்சத்தையும் கொண்டிருந்தது. மேலை நாட்டு முதலாளித்துவம் சுயேச்சையாக வளர்ந்தது போன்று அல்லாமல், இந்திய முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவ உறவுகள் சூழ்ந்திருக்க அந்நிய நிதி மூலதன ஆதிக்கத்தின் கீழ், வளர்ந்து உருவானதாகும். இதன் விளைவாக அது குன்றிய வளர்ச்சியையே கொண்டிருந்தது. ஆனால் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இயக்கத்தில் குதிக்க நேர்ந்தது; இந்திய முதலாளித்துவத்தின் தேசியவாதப் பிரிவு நம் நாட்டில் தன் வர்க்க ஆட்சியை ஏற்படுத்துவதற்கும், இந்திய மக்களை சுதந்திரமாக சுரண்டுவதற்கும் நம் நாட்டின் ஏகாதிபத்திய ஆட்சி தாண்ட முடியாத பெரும் தடையாக இருந்ததால் இயற்கையாகவே ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சி" என்ற இச்சகாப்தத்தில் பிற காலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்த முதலாளித்துவவாதிகளைப் போன்றே, இங்கும் வெகுஜனங்களின் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான புரட்சிகர போராட்டங்கள் கண்டு மரண பயம் கொண்டிருந்தனர். ஏனெனில் இந்திய மக்களின் தேசிய விடுதலைக்கான புரட்சிகர போராட்டங்கள் வெற்றி பெறுமானால் ஏகாதிபத்திய ஆட்சி முடிவுக்கு வருவதோடு மட்டுமல்லாமல் இப்போராட்டத்தில் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் தலைமை நீக்கப்பட்டு முதலாளித்துவ மற்ற ஒரு வளர்ச்சிப் பாதைக்கு வழிதிறந்து, இந்தியாவில் முதலாளித்துவ ஆட்சியதிகாரத்தை நிலைநிறுத்தும் வாய்ப்பை முற்றிலும் தகர்த்து விடும் என்று அவர்கள் அஞ்சினர். ஒருபுறம் ஏகாதிபத்தியத்துடன் முரண்பாடு; மறுபுறம் இந்திய மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சிகரப் போராட்டங்களைக் கண்டு மரணபயம்; இதுவே இந்திய முதலாளிகளின் தேசியவாத பிரிவு ஏகாதிபத்தியத்திற்கெதிராக தங்களை ஒரு சீர்திருத்தவாத எதிர்ப்பு அணியாக தகவமைத்துக் கொண்டதற்குக் காரணமாகும். நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான அதன் பாத்திரமும் இதைப்போன்றே சமமான சமரசத்தன்மை கொண்டதாக இருந்தது. ஆக இந்திய முதலாளித்துவம் ஏகாதிபத்தியத்துடனும், நிலப்பிரபுத்துவத்துடனும் சமரசம் செய்து கொண்டு வளர முயற்சித்தது. இந்திய முதலாளித்துவ வர்க்கம் நிலப்பிரபுத்துவத்துடன் சமரசம் செய்து கொண்டதின் விளைவாக பல்வேறு மதங்களை பின்பற்றும் வகுப்பினரை, பல மொழிகளைப் பேசும் பல்வேறு தேசிய இனங்களை முழுமையாக ஒருங்கிணைத்து, ஒரு தேசமாக உருவாக்குவதற்கு அத்தியாவசியமான சமுதாயத்தை ஜனநாயகமயப்படுத்தும் சமூக கலாச்சார புரட்சிகர கடமைகளை நிறைவேற்றிட இயலவில்லை; நிறைவேற்றவும் இல்லை. பல்வேறு மொழி பேசும், பல மதங்களை பின்பற்றும் இந்திய மக்கள் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த அரசியல் இயக்கத்தின் போக்கில் அரசியல் ரீதியாக ஒரு தேசமாக உருவாயினர். ஆனால் நமது தேசிய விடுதலை இயக்கத்தின் தலைமை நிலப்பிரபுத்துவம், நிலப்பிரபுத்துவ ஒற்றுமையின்மை மதத்தோடு கட்டுண்டு கிடப்பது போன்றவற்றிற்கு எதிராக சமுதாயத்தை ஜனநாயகமயப்படுத்துவதற்கான சமூக கலாச்சார புரட்சிகரக் கடமைகளை நிறைவேற்றிட பிரதானமாக தவறிவிட்டதால் இந்திய மக்கள் மதம், சாதி, மொழி, இனம் போன்றவற்றால் சமூக மற்றும் கலாச்சாரரீதியில் பல்வேறு சமூகங்களாக பிளவுபட்டே நின்றனர்.

இது மட்டுமல்ல; இந்திய மக்களை மதக்கட்டுத் தளையிலிருந்து விடுவிக்கவோ, சமூக மற்றும் கலாச்சார புரட்சிகரக் கடமைகளை நிறை வேற்றுவதின் மூலம் சமூகத்தை ஜனநாயகமயப்படுத்தவோ, இந்திய தேசியவாத தலைமை முயற்சிக்காதது மட்டுமின்றி அதற்கு மாறாக தேசியவாதக் கருத்துக்களை பரப்புவதற்கு மதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டது. ஆக இந்திய தேசியவாதம் அடிப்படையில் மதச் சார்புள்ளதாக இருந்தது. மதம் சார்ந்த தேசியவாதம் தன்னை இந்து மத புத்துயிர்ப்பு என்ற வடிவத்தில் வெளிப்படுத்திக் கொண்டது. இந்து மத புத்துயிர்ப்பு சார்ந்த இந்திய தேசியவாதமானது இந்துக்கள் அல்லாத மக்களிடையே குறிப்பாக முஸ்லீம் மக்களிடம் உளவியல் ரீதியில் உருவாக்கிய எதிர்வினையே அவர்களை நம் நாட்டின் தேசிய விடுதலை இயக்கத்திலிருந்து புறந்தள்ளி வைத்ததற்கு பெரும்பாலும் காரணமாயிற்று. மேலும் இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெறும்போது எந்த ஒரு முஸ்லீமிற்கும், பாதுகாப்போ, மத உரிமையோ இல்லாத இந்துக்களின் கொடுங்கோல் ஆட்சி போன்ற ஒன்றைத்தவிர வேறொரு நன்மையும் விளையாது என்று, இந்திய முஸ்லீம் மக்களை நம்ப வைப்பதற்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளுக்கும், மற்றும் தேசியவாத எதிர்ப்பு ஏகாதிபத்திய ஆதரவு முஸ்லீம் தலைவர்களுக்கும் முழுவாய்ப்பினை இது வழங்கியது. இச்சூழ்நிலையில் பிரிவினைக்கு முந்தைய இந்தியாவில் இருந்த முஸ்லீம்கள் தங்களுக்கென தனி தாய்நாடு வேண்டும் என்று கோரியதற்கு முழுப்பழியையும் அவர்கள் மீது சுமத்துவது தவறல்லவா? முஸ்லீம்கள் குறித்து மட்டும் ஏன் பேச வேண்டும்? தாழ்ந்த சாதி இந்துக்கள் என்று அழைக்கப்படுவோரின் நிலை என்ன? சமூக மற்றும் கலாச்சாரப் புரட்சிகரக் கடமைகளை நிறைவேற்றாததின் விளைவாக, இந்து சமயத்தில் சமூக ரீதியில் பின்தங்கிய மக்கள், மத கட்டுத்தளையில் மட்டுமின்றி, உயர்சாதி இந்துக்கள் என்று அழைக்கப்படுவோரின் சமூகக் கலாச்சார அடக்குமுறையின்கீழ் இன்னும் இருந்து வருகின்றனர். இந்த அம்சத்தைப் பொறுத்த மட்டிலும் இந்திய தேசியவாதம் தன்னை ஒரு பரந்துபட்ட இந்துமத புத்துயிர்ப்புவாதமாகக் கூட காட்டிக்கொள்ள முடியவில்லை. காந்திஜி மற்றும் வேறு சில தலைவர்கள் முயற்சித்த போதும் கூட அதற்கு மாறாக, வங்கத்தில் பிராமணர்கள், ஷத்திரியர்கள், காயஸ்தர்கள், வைத்தியர்கள் (Vaidyar) மற்றும் பிற உயர்ஜாதி இந்துக்கள் என்று அழைக்கப்படுவோரின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள பிராமணிய சம்பிரதாய புத்துயிர்ப்புடன் அது தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டது...

இந்து மதத்தின் பரந்த மனப்பான்மை, சகிப்புத் தன்மையின் அடிப்படையில் அல்லது ஜனநாயக சமுதாய கோட்பாடுகளுக்கு ஒவ்வாத இஸ்லாமிய மதப்பழக்கங்களைப் பாதுகாக்க உதவியதின் மூலம் முஸ்லீம் மக்களை இந்திய தேசியத்திற்குள் ஒன்றிணைக்க தேசியவாத முதலாளித்துவ தலைமை எடுத்த இப்படிப்பட்ட முயற்சிகள் முஸ்லீம் மக்களுக்கும், தேசியவாத சக்திகளுக்கும் மத்தியில் இடைவெளியை மேலும் பெரிதாக்கிற்று. இது தவிர்க்க முடியாததேயாகும். மதம், மொழி, சாதி, இனம் போன்றவற்றில் வேறுபடும் மக்களை ஒருமித்த தன்மை கொண்ட ஒரு தேசமாக உண்மையிலேயே ஒருங்கிணைப்பதை, ஒருங்கிணைப்பின் செயல்போக்கிற்கு தடைச் சக்தியாக இருக்கும் மதபழக்க வழக்கங்களுக்கு ஆதரவளிப்பதின் மூலம் ஒரு போதும் நிறைவேற்ற முடியாது. சமூக மற்றும் கலாச்சார புரட்சிகரக் கடமைகளை நிறைவேற்றும் போக்கில் சமுதாயத்தை ஜனநாயகமயப்படுத்துவதின் மூலம் தனிநபர்களின் சமூக நடவடிக்கைகளை பொறுத்தமட்டில் மதம் முற்றிலும் சக்தியற்ற ஒன்றாக மாற்றப்படும்போது மட்டுமே வெவ்வேறு சமூக மக்களை உண்மையாகவே ஒன்றிணைத்து ஒரு தேசமாக உருவாக்க முடியும். தேசியவாத முதலாளித்துவ தலைமையோ அல்லது அதற்கு ஒரு மாற்றுதலைமையை நிறுவிவிடும் அவசியத்தைப் பற்றி பேசிய பிறசக்திகளோ, இந்திய தேசத்தை உருவாக்குவதற்கான இவ்வத்தியாவசியமான கடமைகளை நிறைவேற்றவில்லை. ஆக அனைத்து சமூக மக்களையும் ஒரு தேசமாக ஒன்றிணைப்பதில் நேர்மை இருப்பினும் கூட தவறான வழிமுறையைக் கடைப்பிடித்ததால் பல சமூக மக்களையும் குறிப்பாக முஸ்லீம் மக்களையும் ஒரு தேசமாக ஒருங்கிணைப்பதில் தோல்வியடைந்தனர்...

இந்த அம்சத்தில் தேசியத்தலைமை கடைபிடித்த தவறான அணுகுமுறையை அதிகாரத்திற்கு வந்த பின்பும் கூட திருத்திக் கொள்ளவில்லை. நம் நாட்டின் இன்றைய ஆட்சியாளர்கள், சமூக கலாச்சார புரட்சிகரக் கடமைகளை நிறை வேற்றுவதற்கு மாறாக மதச்சார்பின்மை என்ற பெயரில் மதச்சார்பின்மைக்கு எதிரான சக்திகளுக்கும், போக்குகளுக்கும், அனைத்துவித மத பழக்க வழக்கங்களுக்கும், பண்டைய பழக்கத்திற்கும், முன் அபிப்பிராயங்களுக்கும் அதீத ஆர்வத்துடன் ஊக்கம் அளித்து வருகின்றனர். இவையனைத்தும் சுதந்திரத்திற்கு முந்தைய காலத்தில் இருந்ததைவிட பல மடங்கு அதிகரித்துவிட்டன. இச்சூழ்நிலையில் இந்துமதப் புத்துயிர்ப்பு என்ற கோஷம் பலமாக காலூன்றி வருவதில் ஆச்சரியம் ஏதும் இல்லை. உண்மையான மதச்சார்பின்மை என்பதற்கு தனிநபர்கள் தாங்கள் நம்பும் மதத்தை கடைப்பிடிக்கவோ, பரப்பவோ, உயர்த்திப் பிடிக்கவோ ஊக்கமளிப்பது என்று அர்த்தமாகாது என உணரப்பட வேண்டும்; அல்லது வெகு ஜனங்களிடையே மத செல்வாக்கினை பரப்பிடும் வகையில் ஒவ்வொரு மத நம்பிக்கைக்கும் அரசு ஆதரவு அளிப்பது என்றும் அர்த்தமாகாது. அல்லது குறிப்பிட்ட மதத்தைப் பின்பற்றும் ஒரு சமூகத்தினருக்கு மதத்தை மட்டும் கருத்தில் கொண்டு விசேச சலுகைகளை வழங்குவதும் அதன் நோக்கமாக இருக்க முடியாது. ஒரு உண்மையான மதச் சார்பற்ற அரசு மதத்தை தன் குடிமக்களின் தனிப்பட்ட விஷயமாகக் கருதுகிறது. எனவே தனிநபர்கள் மதத்தை கடைப்பிடிப்பதை, பின்பற்றுவதை, பரப்புவதை அரசு ஆதரிப்பதும் இல்லை; எதிர்ப்பதும் இல்லை; தலையிடுவதும் இல்லை. இதற்கு மாறாக அது மத நம்பிக்கை உள்ளவர்களுக்கும், மத நம்பிக்கையற்றவர்களுக்கும், தங்கள் நம்பிக்கைகளைப் பின்பற்றுவதற்கு முழு சுதந்திரத்தை உத்தரவாதப் படுத்துகிறது. சமூக, கலாச்சார புரட்சிக்கரக் கடமைகளை நிறைவேற்றுவதின் மூலம் அத்தகைய அரசு சமூகத்தை ஜனநாயகப்படுத்தி, மதத்தின் செல்வாக்கை தனிநபர் மற்றும் அரசின் சமூக நடவடிக்கைகளிலிருந்து விலக்கி அதனைச் சக்தியற்றதாக்கி விடுகிறது. நம் நாட்டின் இன்றைய முதலாளித்துவ ஆட்சியாளர்களின் அதீத இந்து மத புத்துயிர்ப்பு போக்கின் விளைவாக இந்திய மக்கள் இன்றளவும் மொழி, மதம், சாதி, இனத்தால் பிளவுபட்ட பல்வேறு சமூகங்களாக ஒருவித சமூக கலாச்சார கலவையாகவே இருந்து வருகின்றனர்.

எனவே நமது நாட்டின் வகுப்புவாதப் பிரச்சினைக்கு தீர்வு என்பது சமூகக் கலாச்சார புரட்சிகளை நிறைவேற்றுவதின் மூலம் சமுதாயத்தை ஜனநாயகப்படுத்தும் சரியான வழிமுறையில்தான் பொதிந்திருக்கிறது.

இன்றைய பூர்ஷுவாக்களால் ஜனநாயகப் புரட்சியின் கடமைகளை நிறைவேற்ற முடியாது...

மேற்கத்திய ஜனநாயக நாடுகளில் நிலப்பிரபுத்துவ பிரிவினை அம்சங்களைப் பொறுத்த மட்டில் தேசத்தை உருவாக்கும் செயல்முறை பிரதானமாக முற்றுபெற்றுவிட்டது என்பது உண்மையே. எனவே அங்கு வகுப்புவாத, மதவாத வேறுபாடுகள் தேசிய வாழ்க்கையில் எந்த ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை. ஆனால் தானே துவக்கிய ஜனநாயக மயமாக்கும் செயல்முறையை முழுமையாக நிறைவேற்றும் திறன் எந்த பூர்ஷ்வா வர்க்கத்திற்கும் கிடையாது. எனவே முதலாளித்துவ ஆட்சியில் ஜனநாயக புரட்சியின் சில கடமைகள் நிறைவேற்றப்படாமலே இன்னும் தொடர்கின்றன. தேசிய இனப் பிரச்சினையும் அப்படிப்பட்ட நிறைவேற்றப்படாத கடமைகளுள் ஒன்றாகும். அனைத்து முதலாளித்துவ நாடுகளிலும் எங்கெல்லாம் ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் இருக்கின்றனவோ,

தொடர்ச்சி 8ம் பக்கம்

# சக்திவாய்ந்த, போர்க்குணமிக்க பாட்டாளி வர்க்க ஜனநாயக இயக்கங்கள் மற்றும் அடிப்படைவாதம், பழமைவாதத்திற்கெதிராக தீவிர சித்தாந்தப் போராட்டம் - இத்தருணத்தின் தேவை

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 22வது காங்கிரஸ் துவக்க அமர்வு

## புதுச்சேரி மார்ச் 25, 2015 தோழர் பிரவாஸ் கோஷ் அவர்களின் உரை



சிபிஐ யின் 22வது கட்சிக் காங்கிரஸில் தோழர் பிரவாஸ் கோஷ், பொதுச் செயலாளர் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) உரையாற்றுகிறார்.

மதிப்பிற்குரிய தோழர் ஏ பி பரதன் அவர்களே, தலைமைக்குழு உறுப்பினர்களே இதர இடதுசாரி கட்சிகளின் தலைவர்களே பிரதிநிதித் தோழர்களே,

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்) ன் சார்பாக உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை உரித்தாக்குகிறேன். நமது நாட்டின் ஆகப்பழைமையான இடதுசாரி கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியாகும். இக்கட்சி மிக நீண்ட போராட்டப் பாரம்பரியத்தைக் கொண்டது. நாங்கள் எப்போதுமே மற்றவர்களிமிருந்து பாடங்கள் கற்பது போலவே உங்களுடன் சித்தாந்த ரீதியான வேறுபாடுகள் கொண்டிருந்த போதிலும் அப்போராட்டங் களிலிருந்து நாங்கள் பாடங்கள் பெற்றுள்ளோம்.

உலக முதலாளித்துவம் ஏகாதிபத்தியம் ஆழ்ந்த நெருக்கடியில் சிக்கியிருக்கிறது என்று சர்வதேச சூழ்நிலை குறித்து உங்களுடைய பொதுச்செயலாளர் முன்வைத்த கருத்துடன் நான் ஒத்துப்போகிறேன். மாமனிதர் லெனின் நீண்ட நாட்களுக்கு முன்பே சுட்டிக்காட்டியதைப் போல முதலாளித்துவமானது ஏகபோகம் ஏகாதிபத்தியம் என்ற கட்டத்தை அடைந்து மரணத்தறுவாயில் உள்ளது. ஆகப்பெரும் நெருக் கடியில் சிக்கி தனது மரணப்படுக்கையில் கிடக்கும் முதலாளித்துவம் இன்று ஐ சி யு (ICU) என்று சொல்லப்படும் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு செயற்கை சுவாசத்தில் வைக்கப் பட்டுள்ளது போன்று அதன் ஆயுட்காலம் செயற்கையாக நீட்டிக்கப்பட்டுள்ளது. மடிந்து கொண்டிருக்கும் இந்த முதலாளித்துவம் ஏகாதிபத்தி யத்தை பிழைக்கவைப்பதற்கு மருத்துவர் எவரும் இல்லை.

ஆனால் சோகம் என்னவென்றால் முதலாளித் துவம் ஏகாதிபத்தியத்தின் சவக்குழி தோண்ட வேண்டியவர்கள் அதாவது உலக புரட்சிகர பாட்டாளிகள் சவக்குழி தோண்டுவதற்கு தயாராக இல்லை. தனிமனித துதியை எதிர்த்து போரிடுவதாக சொல்லிக்கொண்டு மாமனிதர் ஸ்டாலினை திருத்தல்வாதிகள் பகிரங்கமாக கண்டனம் செய்த தாலும் இதன் வாயிலாக உண்மையில் லெனினிசத்தின் அத்தாரிட்டியையே உதறித் தள்ளியதாலும் மாபெரும் உலக சோசலிச அமைப்பு வருத்தத்திற்குரிய வகையில் சிதைவுற்றது. இவ்வாறாக எதிர்ப் புரட்சிக்கான களம் தயாரிக்கப்பட்டது.

ஆயினும் நம்பிக்கைக்கும் இடமிருக்கிறது. உலகம் முழுவதும் அங்கொன்றும் இங்கொன்றுமாக மக்கள் போராட்டம் வெடித்தெழுகிறது. இப் போராட்டங்கள் தலைமை வேண்டி கோரு கின்றன. இப்போதோ அப்போதோ மார்க்சிசம் லெனினிசத்தின் சரியான புரட்சிகர புரிதலோடு உலகம் முழுவதும் புரட்சிகர இயக்கங்கள் வெடித்தெழும் என நம்புகிறோம். உலக முதலாளித்துவ ஏகாதிபத்தியத்துக்கு சவக்குழி தோண்டுவதற்கு பாட்டாளி வர்க்கத்தின் தலைமை மீண்டும் உருவெடுக்கும் என நம்புகிறோம்.

நமது நாட்டில் ஏகபோக நிறுவனங்கள் பன்னாட்டு கம்பெனிகள் ஒட்டுமொத்த முதலாளித்துவ வர்க்கம் ஆகியன தங்களது ஈவிரக்கமற்ற சுரண்டலை தொடர்வதற்கும் மேலும் தீவிரப்படுத்துவதற்காகவும் மறுபுறத்தில் பாசிசமயமாக்கும் போக்கை முடுக்கி விடுவதற் காகவும் செயற்கையாக ஊதிப் பெருக்கிக்காட்டி பாஜகவை ஆட்சியில் அமர்த்தியுள்ளன. பாசிசமயம் என்பது இன்று நம் நாட்டில் அதிதீவிர கொடுமையாக வேகமாக வளர்ந்துவருகிறது.

நம் நாட்டில் ஏற்கனவே ஏகபோகம் என்ற வடிவில் மூலதனம் அடர்த்தியாக குவிக்கப் பட்டுள்ளது அரசு அதிகாரம் மையப்படுத்தப் பட்டுள்ளது. இவ்வாறாக ஏற்கனவே நிர்வாக பாசிசம் நிலவிவருகிறது. மேலும் காலாவதியாகி விட்ட கிழடுதட்டிப்போன மதக்கருத்துக்கள் மூடநம்பிக்கைகள் பழைமைவாத சிந்தனைகள் போன்றவை தூபம் போடப்பட்டு ஊக்கப் படுத்தப்படுகின்றன. இவ்வாறாக சித்தாந்த கலாச்சாரத் துறைகளில் கடுமையான தாக்குதல் நடத்தப்படுகிறது. நவீன அறிவியல் கண்டுபிடித்த பல அரிய கண்டுபிடிப்புகள் ஏற்கனவே பண்டைய இந்தியாவிலேயே கண்டுபிடிக்கப்பட்டதாக கேலிக்கூத்தான வகையில் போலிப்பெருமைகள் தம்பட்டம் அடித்துக்கொள்ளப்படுகின்றன. இந்து மதவெறியையும் பண்டைய பாரம்பரிய உணர்வு களையும் வளர்ப்பதற்காகவே இவை யெல்லாம் செய்யப்படுகின்றன.

உலகம் முழுவதும் ஹிட்லரை பகிரங்கமாக கண்டித்த நாட்களை நான் நினைவு கூறுகிறேன். அந்நாட்களில் நமது மண்ணில் ஒரு குரல் ஒலித்தது. கோல்வால்கரின் குரல் அது. ஹிட்லரின் பெருமை களை புகழ்பாடியது அக்குரல். ஏனெனில் தனது இனத்தின் தூய்மையை பாதுகாப்பதற்கு ஜெர்மனியில் யூதர்களை இல்லாதொழித்தார் என்பதால். அத்தகைய ஹிட்லரை மிக உற்சாகத் தோடு துதிபாடிய அவர் இந்தியாவிலும் இந்து தேசியவாதத்தின் தூய்மையை பாதுகாப் பதற்கும் இதுவே ஒரே வழி என்றார்.

அத்தகைய கோல்வால்கர் இருந்த ஆர்எஸ்எஸ் ஸின் ஒரு அங்கம்தான் பாரதிய ஜனதா கட்சியாகும். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஆர்எஸ்எஸ் ஒருபோதும் பங்கேற்கவில்லை. மாறாக சுதந்திரப் போராட்டத்தை ஆர்எஸ்எஸ் தலைமை விமர்சித்தது. ஏனெனில் அப்போராட்டம் இந்து தேசியத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் புவிப்பரப்பு ரீதியிலான தேசியத்தை அடிப்படை யாகக் கொண்டதாகவும் பொது எதிரியான பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதாகவும் இருந்ததாலாகும். இந்திய மறுமலர்ச்சி உயர்த்திப் பிடித்த மதச்சார்பற்ற ஜனநாயக மதிப்புகள் அனைத்தையும் ஆர்எஸ்எஸ் அழித்து வருகிறது. எனவே கலாச்சாரத் துறையில் ஆன்மீகவாதமும் பழைமைவாதமும் ஊக்கப்படுத்தப்படுவதையும் இவற்றோடு அறிவியலின் அடிப்படை கருத்தியல் களுக்கு மாறாக அறிவியலின் தொழில்நுட்ப அம்சங்கள் மட்டுமே ஊக்கப்படுத்தப்படுவதையும் காண்கிறோம். அறிவியல்பூர்வ கண்ணோட்டம் அறிவியல் மதிப்புகள் அனைத்தும் அழிக்கப்பட்டு வருகின்றன. இது முழுக்க முழுக்க பாசிச தாக்குதலாகும். இத்தாக்குதலை முறியடிப்பதற்கு சக்திவாய்ந்த சித்தாந்த போராட்டம் அவசியமாகும்.

ஒன்றுபட்ட இடதுசாரி ஜனநாயக இயக்கமே இத்தருணத்தின் தேவையாகும். ஆனால் இடதுசாரிகள் என்பவர் எவர்? தங்களை மார்க்சிஸ்டுகள் என்று கருதிக்கொள்பவர்களே இடதுசாரிகள் என்பது தெளிவு. மார்க்சியத்தைப் பற்றிய புரிதலிலும் அதன் பிரயோகத்திலும் அடிப்படை வேறுபாடுகள் இருப்பினும் தங்களை மார்க்சிஸ்டுகளாக கருதிக்கொள்பவர்களையே இடதுசாரிகள் எனக்கொள்ளவேண்டும். அத்தகை யோருக்கிடையே சித்தாந்த வேறுபாடுகளும் சித்தாந்த போராட்டமும் இருக்கலாம். இவையெல்லாம் அவர்களுக்கிடையேயான ஒற்றுமையை பலப் படுத்துவதற்கேயன்றி பலவீனப் படுத்துவதற்கல்ல. மேம்பட்ட புரிதலை வளர்ப்பதற்கு சித்தாந்த போராட்டம் அவசியமாகும்.

மதச்சார்பற்ற ஜனநாயக கட்சிகள் என்பவை எவை? இது குறித்து பெரும் குழப்பம் நிலவுகிறது. பாஜகவை எதிர்ப்பது மட்டுமே ஒரு கட்சியை மதச்சார்பற்ற கட்சியாக்கிவிடாது. தேர்தலில் வெற்றிபெறவேண்டும் என்பதற்காக மட்டுமே பாஜகவை எதிர்க்கிறார்கள். காங்கிரசும் பாஜகவை எதிர்க்கிறது. அதற்காக காங்கிரசை மதச்சார்பற்ற கட்சி என்று கூறிவிட முடியுமா? மேலும் பல பிராந்திய கட்சிகள் ஜாதிய குறுகியவாத கட்சிகள் என பலதரப்பட்ட கட்சிகள் உள்ளன. இவற்றையும் மதச்சார்பற்ற கட்சிகள் என்று கூறமுடியாது.

மதச்சார்பின்மை என்பதற்கு சரித்திரபூர்வமான அர்த்தமொன்று உள்ளது. ஐரோப்பிய மறு மலர்ச்சியின்போது முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின்போது மதச்சார்பின்மை கோட்பாடு உதயமானது. தத்துவார்த்த ரீதியாக மதச் சார்பின்மை என்பது ஆன்மீக சக்தி எதையும் அங்கீகரிக்காமல் இருப்பதும் இயற்கையும் பொருளாதய உலகமும் மட்டுமே யதார்த்த மானதும் உண்மையானதும் என்று அங்கீகரிப்பதுமே மதச்சார்பின்மை என்பதன் பொருளாகும்.

அரசியல் ரீதியாக மதச்சார்பின்மை என்பதன் பொருள் அரசியல் கல்வி சமூக விவகாரங்கள் ஆகியன மதத்தோடு எந்த தொடர்பும் கொள்ளா திருத்தல் என்பதாகும். இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்தில் மதச்சார்பின்மை என்ற சொல் காணப்படுகிறது. வெறும் வார்த்தையாக மட்டுமே எழுதப்பட்டுள்ளதேயன்றி நடைமுறையில் மதச்சார்பின்மை கடைபிடிக்கப்படவில்லை. அனைத்து மதங்களையும் ஊக்குவிப்பது மதச் சார்பின்மை ஆகாது. அரசும் அதன் நடவடிக்கைகள் அனைத்தும் மத அணுகுமுறையிலிருந்து விடுபட்டிருக்கவேண்டும்.

ஜனநாயகக் கட்சிகள் என்பவை எவை? வார்த்தைகளில் மட்டுமின்றி செயலிலும் மதச்சார்பின்மையை கடைபிடித்து ஜாதீயம் குறுகியவாதம் வகுப்புவாதம் ஆகியவற்றை எதிர்த்து ஏகாதிபத்தியத்தை தொடர்ந்து எதிர்த்து இடதுசாரிக்கு தொடர்ந்து ஆதரவளித்து மக்களின் ஜனநாயகக் கோரிக்கைகளை உயர்த்திப்பிடிக்கும் கட்சிகளே ஜனநாயகக் கட்சிகளாகும். இக்கட்சிகள் அதிகாரத்தில் இருக்கும்போதும்கூட ஜனநாயக இயக்கங்களையும் விவசாயிகள் போராட்டங் களையும் தொழிலாளர் போராட்டங்களையும் நசுக்காது.

ஆகவே நமது மூளையை செலுத்தி சிந்திக்கவேண்டிய விஷயங்கள் இவையேயாகும். தேர்தலில் ஆதாயம் தேடவேண்டும் என்பதற்காக அவசரகதியில் கொள்கை கோட்பாடு ஏதுமின்றி கூட்டணிகளுக்கு செல்லக்கூடாது. இடதுசாரி வாதம் மதச்சார்பின்மை ஜனநாயகம் ஆகியன தெளிவாக வரையறுக்கப்படவேண்டும்.

முதலாவதாக மதஅடிப்படைவாத அணுகு முறைக்கும் மத்தியகால அணுகுமுறைக்கும் எதிராக உக்கிரமான தீர்மானகரமான சித்தாந்த போராட்டம் நடத்தப்படவேண்டும். இத்தகு சிந்தனைகள் கெடுதல்மிக்க தாக்கத்திலிருந்து மக்கள் மனங்களை விடுவிக்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

இரண்டாவதாக இந்தியா சுதந்திரம் அடைந்த உடனேயே வளர்த்தெடுக்கப்பட்டதைப் போன்று சக்திவாய்ந்த போர்க்குணமிக்க பாட்டாளி வர்க்க மற்றும் ஜனநாயக இயக்கங்களை வளர்த் தெடுக்கவேண்டும். அது இந்திய இடதுசாரி இயக்கத்தின் பிரகாசமான காலமாகும். துப்பாக்கி தோட்டாக்களையும் குண்டாந்தடிகளையும் எதிர்கொண்டேனும் அப்போது வளர்த்தெடுத் ததைப்போன்ற வர்க்கப்போராட்டங்களையும் ஜனநாயக இயக்கங்களையும் நாம் வளர்த் தெடுக்கவேண்டும். அப்போதுதான் இழந்த கௌரவத்தையும் நம்பகத்தன்மையையும் மக்களிடமிருந்து இடதுசாரி இயக்கம் மீண்டும் பெறமுடியும்.

எமது கட்சியின் புரிதல் இதுவே. உங்களது சீரிய பரிசீலனைக்கு இவற்றை உங்கள் முன் வைக்கிறேன். இதற்கு மேல் நான் உங்கள் நேரத்தை எடுத்துக்கொள்ளக்கூடாது. நீங்கள் ஏற்கனவே களைப்படைந்துள்ளீர்கள்.

உங்கள் அனைவருக்கும் செவ்வணக்கம். உங்கள் கட்சி காங்கிரஸ் வெற்றிபெற வாழ்த்துகிறேன்

மார்க்சிசம் லெனினிசம் ஓங்குக!

பாட்டாளி வர்க்க சர்வதேசியம் ஓங்குக!

# வார்த்தை ஜாலங்களைக் கொண்டு உண்மையை மறைக்கின்றனர்

1ம் பக்கத் தொடர்ச்சி..

சந்திக்கும் பிரதானமான பிரச்சினைகள் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை.

இந்திய முதலாளித்துவப் பொருளாதாரத்திற்கு சர்வதேச முகமைகள் என்ன வரிசைத் தரம் வழங்குகின்றனர், ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியின் (ஜிடிபி) கடந்த கால, தற்போதைய, எதிர்வரும் நிலைமை என்ன, ஊகத்தின் மூலம் பங்குச் சந்தைகள் எப்படி ஏற்ற இறக்கங்களைச் சந்திக்கின்றன, இந்தியப் பொருளாதாரம் பறக்கப்போவது நிலவுக்கா அல்லது செவ்வாய்க்கா என இன்னும் இதுபோன்ற பூர்ஷ்வா வார்த்தை ஜாலங்களைப் பற்றியெல்லாம் சாமானிய மக்கள் கிஞ்சித்தும் கவலை கொள்ளும் நிலையில் இல்லை. தொடர்ந்து சீரழிந்துவரும் தங்களது வாழ்க்கைத் தரம் கொஞ்சமாவது உயருமா, தங்களது கஷ்டத்திற்கு சிறிதளவாவது விமோசனம் கிடைக்குமா என்பதில்தான் அவர்கள் ஆர்வமாக இருக்கின்றனர். இந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தால், இந்த பட்ஜெட் சாமானிய மக்களின் விருப்பங்கள் மற்றும் நம்பிக்கைகளுக்கு விழுந்த சம்மட்டி அடியே இது என்றும், இது சாமானிய மக்களின் தலையில் விழுந்த இடி என்றுமே கருதமுடியும். உண்மைகள் இதனை நிரூபிக்கும்.

### விலைவாசி உயர்வு

முதலில் கொடூரமான விலைவாசி உயர்வை நாம் எடுத்துக்கொள்வோம். 'தனது அரசாங்கத்தின் சாதனைகளில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தியது மிகமுக்கியமான ஒன்றாகும்' என்று நிதி அமைச்சர் கோருகிறார். அவரது கூற்றுக்கு ஆதரவாக, அவர் முன்வைக்கும் கருத்தாவது 'சமீபத்திய நுகர்வோர் விலைக் குறியீடு (consumer price Index) **5.1%**, மொத்த விலைப் பணவீக்கம் குறை மதிப்பாகும்' என்று கூறுகிறார். நுகர்வோர் விலைக் குறியீடு என்பது, போக்குவரத்து, உணவு மற்றும் மருத்துவ சேவை உள்ளிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட நுகர்வோர் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளின் மதிப்பிடப்பட்ட சராசரியை ஆய்வு செய்யும் குறியீடுதான். பிரச்சினை என்னவென்றால் நிதி அமைச்சரின் கூற்றுக்கும் சாமானிய மக்களின் அனுபவத்திற்கும் மிகப்பெரிய வேறுபாடு நிலவுகிறது, இந்தத் தரவுகளை யார் அளித்தது, எந்த அடிப்படையில் இந்தப் புள்ளிவிபரம் எட்டபட்டது என்று அவர்கள் ஆச்சரியப் படுகின்றனர். இதை 'புள்ளியியல் ஜாலம்' என்று நிபுணர்களே ஊடகங்களில் கருத்துத் தெரிவித் துள்ளனர். தினசரி சந்தைகளில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் எட்டாக் கனியாகி வருவதை தினந்தோறும் மக்கள் கண்டு வருகின்றனர். ஆனால் நிதி அமைச்சரோ பணவீக்கத்தை, அதாவது விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தி விட்டதாகப் பெருமிதம் கொள்கிறார். என்ன ஆச்சர்யம்! அப்படியானால் பணவீக்கம் பற்றி இரண்டு முரண்பட்ட கண்ணோட்டங்கள் இருப்பது தெளிவாகிறது. ஒன்று நிதி அமைச்சரும் அவரைப் போன்றவர்களுடையது மற்றொன்று அடித்தட்டு மக்களுடையது. அதோடு வெந்தபுண்ணில் வேல்பாய்ச்சுவது போல், பட்ஜெட் வாசிக்கப்பட்ட உடனேயே பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள் உயர்த்தப்பட்டன. இந்த விலை உயர்வு பொதுவான பொருட்களின் விலையை கட்டாயம் மேலும் அதிகரிக்கச் செய்யும். பெட்ரோல் டீசல் விலையைக் குறைக்க வேண்டிய நேரத்தில் அதற்குப் பதிலாக கடந்த நவம்பர் முதல் நான்கு முறை தொடர்ச்சியாக சுங்க வரியானது பெட்ரோலுக்கு ரூ. **7.75** ம், மொத்தத்தில் டீசலுக்கு ரூ. **7.50** ம் உயர்த்தப்பட்டது. இதன் பொருள் யாதெனில், சர்வதேச சந்தையில் பெரிய அளவில் கச்சா எண்ணெய் விலை குறைந்த போது, அதன் பயன் மக்களுக்குப் போய் சேரும் என்ற அரசாங்கங்களின் உத்திரவாதத்திற்கு மாறாக, அதன் பலன்கள் மக்களுக்கு சென்றடைய விடாமல் அனைத்தையும் அரசாங்கமே அபகரித்துக்கொண்டது. தொடர்ச்சியான விலை உயர்வை முதலாளித்துவப் பொருளாதாரம் தூண்டும் என்பது அதன் பொதுவான விதியாகும், கூடவே பதுக்கல்காரர்கள், கள்ளச் சந்தைக்காரர்கள், மற்றும் ஊக வணிகர்கள் ஆகியோர் விலையை மேலும் முறைகேடாக மாற்றி அமைக்கின்றனர். இதுதொடர்பாக நிதி அமைச்சர் வாய்திறக்காமல் மௌனம் சாதித்திருப்பது, இப்படி அநியாயமாக விலையை மாற்றி அமைப்பவர்களை அரசாங்கம் கண்டுகொள்ளப் போவதில்லை என்பதையே காட்டுகிறது. புள்ளிவிபரங்களை திருத்தி அளித்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி பேசுகையில், தேசிய வருவாய் மற்றும் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி குறித்து நிதி அமைச்சரே உயர்த்திக்காட்டப்பட்ட தகவல்களைத் தெரிவித்திருக்கிறார் என்று பலர் குற்றம் சாட்டு கின்றனர். விவரங்கள் சேகரிப் பதற்கான புதிய முறையின்படி கணக்கிடுதலில் **2004 – 2005** ஆம் ஆண்டிற்குப் பதிலாக **2011–12** ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டிருக்கிறார்கள், அது தேசிய வருவாயை ஊதிப்பெருக்கிக் காட்டுகிறது. தவறான தேசிய வருவாயைக் காட்டினால் அது பட்ஜெட் பற்றாக்குறையைக் குறைப்பதற்காக என்று கூறி அரசாங்கம் மேலும் கடன் வாங்க வழிவகுக்கும் என்பதற்காகவே இதை அரசாங்கம் வேண்டுமென்றே செய்திருக்கிறது என்று கூறப்படுகிறது. அதேபோல், கடந்த சில ஆண்டுகளாக இந்தியப் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சி அடைந் திருக்கிறது என்பதை மறைப்பதற்காகவே ஜிடிபி யும் உயர்த்திக் காட்டப்பட்டிருக்கிறது. எனவேதான் ஒரு வர்ணனையாளர் கிண்டலாக இந்தியப் பொருளாதாரம் யதார்த்தத்தைப் பற்றிக் கவலைப்படுவதற்குப் பதிலாக, புள்ளிவிபரங்களை திருத்தி தான் உயர்ந்து வருவதாக நப்பாசைப் பட்டுக்கொள்ளலாம்' என்று கூறினார்.

### வேலையில்லாத் திண்டாட்டம்

வேலையில்லாத் திண்டாட்டத்தைக் கட்டுப் படுத்தும் பிரச்சினைக்கு வருவோம். பிரதமர்களும் நிதி அமைச்சர்களும் வேலை வாய்ப்பை உருவாக்குவோம், வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்போம் என்று வழக்கமாகப் பேசுவதை நாட்டுமக்கள் கேட்டு கேட்டு சளித்துப் போய்விட்டனர். இந்த வாக்குறுதிகள் எல்லாமே வெற்று வார்த்தை களாகவே இருந்தன, அதோடு எந்தவொரு பூர்ஷ்வா அரசாங்கமும் அதன் அமைச்சர்களும் இந்த வாக்குறுதிகளைக் கொஞ்சமேனும் நிறைவேற்றுவதற்கு ஒருபோதும் முயன்றதில்லை. இந்த முறையும் கூட, கிராமப்புற இளைஞர்களை மேம்படுத்துவதற்காக புதிய திட்டத்தை கொண்டுவருவதாக கூறியுள்ள நிதி அமைச்சர் அதற்காக வெறும் ரூ. **1500** கோடியை மட்டுமே அறிவித்துள்ளார். ஆனால் அந்தத் திட்டம் என்ன என்பதைப் பற்றிய எந்தத் விவரங்களையும் அளிக்கவில்லை. இரண்டாவதாக, காங்கிரஸ் அல்லது பா.ஜ.க. அல்லது எந்த மாநில கட்சிகளும், பல்வேறு துறைகளில் எதிர்பார்க்கப்படும் முதலீட்டை மட்டுமே சுட்டிக்காட்டி, அதன் மூலம் வேலை வாய்ப்புகள் பெருகும் என்று கூறுகின்றனர். ஆனால் அந்த முதலீடுகள் எந்தெந்த அளவு எங்கே செய்யப்படும் என்பது தெரியவருவதே இல்லை. அதோடு கூடவே, இந்த முதலீடுகள் வருவதாலேயே அது நல்ல ஊதியத்துடன் கூடிய நிரந்தர வேலை வாய்ப்புகளை உருவாக்கி விடும் என்று கூறிடமுடியாது. ஏற்கனவே 'வேலையற்ற வளர்ச்சி என்ற பதம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அரசாங்க அலுவலகங்கள் மற்றும் அரை–அரசாங்க நிறுவனங்களில் புதிதாக வேலைக்கு ஆட்கள் தேர்வு செய்வது நிறுத்தப் பட்டுள்ளது. ஆட்குறைப்பு மற்றும் விருப்ப ஓய்வு போன்றவை அரசாங்க அலுவலகங்கள் உள்பட, பெரும்பாலான தொழிற்சாலை நிறுவனங்களில் ஏராளமாக நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு நாளும் ஏராளமான தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன, அதன் மூலம் நூற்றுக் கணக்கானோர், ஆயிரக்கணக்கானோர் வேலையை விட்டு வெளியேற்றப்பட்டு வருகின்றனர். பணிப் பாதுகாப்பை உத்திரவாதப்படுத்த வேண்டிய அரசாங்கமோ தொழிற்சாலைகளை மூடுவதற்கு ஏதுவாக சட்டங்களைத் திருத்துகின்றன. நிரந்தரப் பணிக்குப் பதிலாக ஒப்பந்தப் பணியில் அரசாங்கமே ஆட்களை நியமிக்கின்றது. வேலையிழந்த தொழிலாளர்கள் வேறு வழியின்றி விரக்தியில் தற்கொலை செய்துகொள்வது அதிகரித்து வருகின்றது. உற்பத்தி செலவைக் குறைப்பதற்காக தொழிலதிபர்கள் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கு செல்கின்றனர், அதோடு மிகக் குறைந்த ஊதியத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்களை நியமிக்கின்றனர்.

மிகவும் பிரபலமாக பகட்டாகப் பேசப்பட்ட கம்ப்யூட்டர் துறையிலும் பன்னாட்டு நிறுவனங்கள் ஆட்குறைப்பில் ஈடுபட்டு வருகின்றன. கிராமப் புறங்களில் விவசாயம் செய்ய தேவையான இடுபொருட்களின் விலை உயர்வு, தண்ணீர் இன்மை, மின்சாரத் தட்டுப்பாடு, உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்றவற்றின் விலை உயர்வு, அதோடு இதுவரை இருந்த மானியங்கள் குறைப்பு ஆகியவற்றால் மெல்ல மெல்ல விவசாயம் அழிக்கப்பட்டு வருகிறது. சாதாரண சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்களது தேவைக் குரிய அரிசி, காய்கறிகளைக் கூட உற்பத்தி செய்ய இயலாத சூழல் உருவாகி விவசாயத்தை விட்டே வெளியேற நிர்பந்திக்கப்பட்டு வருகின்றனர். இதனால் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகள் பறிபோய்விட்டது. நிலமற்ற விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் கிராமப்புறங்களில் வேலையின்றி, நகரங்களுக்கும் மற்ற மாநிலங் களுக்கும் கூட நாடோடிகளாய் வேலை தேடி அலைகின்றனர். நகரங்களுக்குச் செல்லும் அவர்கள் பிளாட்பாரங்களில், ரயில் நிலையங் களில், சாலையோரங்களில், பொட்டல்களில் தங்களது குழந்தைகுட்டிகளை வைத்துக்கொண்டு திண்டாடி வாழ்ந்து வருகின்றனர் அல்லது மாண்டு வருகின்றனர். அப்படி வேலை தேடி பிற மாநிலங் களுக்குச் செல்வோரை அந்த மாநிலத்தவர் அடித்து துன்புறுத்தி விரட்டுவது நெஞ்சைப் பிழிகிறது. ஆனால் இதைப் பற்றியெல்லாம் நிதி அமைச்சர் கவலை கொள்ளவில்லை, அதைக் கண்டுகொள்ளவே இல்லை. மூடப்பட்ட தொழிற்சாலைகளை திறப்பதற்கு எந்தவொரு சீரிய முயற்சிகளை எடுப்பதுபற்றி எந்தவொரு குறிப்பும் இல்லை. மாறாக, கிராமப்புற ஏழைகளுக்கு நூறு நாள் வேலையை வழங்கி வந்த மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை உத்திரவாதத் திட்டத்தையும் கேலி செய்யும் அதற்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்காமல் ரூ.**34, 699** கோடி அளவிலேயே நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. இத் திட்டத்திற்காக பட்ஜெட்டில் உறுதிதரப்பட்ட அளவிற்குக்கூட கடந்த ஆண்டு மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை வழங்கவில்லை. பாஜக அரசாங்கம் வேலை வாய்ப்பின்மையை குறைப்பதற்கு எவ்வளவு ஆர்வமாக உள்ளது என்பதை ஒருவர் புரிந்து கொள்வதற்கு இந்த ஒரு உதாரணமே போதுமல்லவா!

அழுகிப்போன சீரழிந்துவிட்ட முதலாளித் துவத்தில், தொழில்மயமாக்கலும் இருக்காது சந்தை நெருக்கடி மற்றும் அதோடு தொடர்பான பொருளாதார நெருக்கடிகளைத் தீர்க்கவும் முடியாது என்பதை மக்களிடம் இருந்து மறைப்பதற்கு முந்தைய காங்கிரஸ் அல்லது வேறு எந்த மாநில பூர்ஷ்வா அல்லது குட்டி பூர்ஷ்வா அரசாங்கங்களைப் போலவே பாஜக அரசாங்கமும் எத்தனிக்கிறது. இவை எல்லாமே முதலாளித் துவத்திலிருந்து பரவுபவை ஆகும். ஒரு சில முதலாளிகளின் லாபம் பெருகுகிறது எனில் பொதுமக்கள் வறியவர்களாவது பெருவாரியாக அதிகரிக்கிறது என்று பொருள். வறியவர்களா கின்றனர் என்றால் அவர்களது வாங்கும் சக்தி குறைகிறது என்று பொருள். அது சந்தை நெருக்கடியை உருவாக்குகிறது. நெருக்கடியின் காரணமாக தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன, வேலைவாய்ப்புகள் இல்லாமல் போகின்றன. அதனால் வேலைவாய்ப்பின்மை பெருகுகிறது, ஆட்குறைப்பைத் தூண்டுகிறது. இந்த நச்சு சுழற்சி ஒருபோதும் முதலாளித்துவத்தில் முடிவடையாது, அதுவும் அதன் அழுகிய காலகட்டத்தில் அது மேலும் அதிகரிக்கும்.

### கல்வி, மருத்துவ சுகாதாரம் மற்றும் நலத்திட்டங்கள்

ஏழைகளுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கும் நிதி அமைச்சர் கல்வி, சுகாதாரம், நடைமுறைப் படுத்தப்படும் கொஞ்சநஞ்ச பொது நலத்திட்டங் களுக்கும்கூட ஒதுக்கும் நிதியின் அளவை பெருமளவு குறைத்துவிட்டார். ஒருங்கிணைந்த குழந்தை வளர்ப்பு திட்டத்திற்கான (ஐசிடிஎஸ்) ஒதுக்கீடு ரூ.**16000** கோடியிலிருந்து ரூ **8000** கோடியாக (பாதியாகக்) குறைக்கப்பட்டுள்ளது, சர்வ சிக்ஷா அபியான் (அனைவருக்கும் கல்வித் திட்டம்) மற்றும் தேசிய வாழ்வாதார திட்டம் போன்ற திட்டங்களுக்கு முறையே **22.14%** மற்றும் **12%** நிதி அளவிற்கு குறைக்கப்பட்டுள்ளது. ஐஐஎம் மற்றும் ஐஐடிக்களை அதிகரிப்பதன்மூலம் கல்வியை மேம்படுத்தப்போவதாக நிதி அமைச்சர் கூறுகிறார், ஆனால் அங்கெல்லாம் சாமானிய மாணவர்கள் நுழையவும் முடியாது, கல்விக்

தொடர்ச்சி 5ம் பக்கம்

# தொழிற்குழுமங்களின், கார்ப்பொரேட் நிறுவனங்களின் அதிவேக வளர்ச்சிக்கான திட்டவரைபடம்

4ம் பக்கத் தொடர்ச்சி

கட்டணங்களும் எக்கச்சக்கம். அதேபோல், மருத்துவ சுகாதார வசதியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எய்ம்ஸ்(AIIMS- All India Institute of Medical Science) மருத்துவமனைகளை அதிகமாகத் திறப்பதாக இருக்கிறது, அவையும் கூட சாமானிய மக்கள் சிகிச்சை வசதி பெறுவதற்கு எட்டாத தூரத்தில் உள்ளது. கடந்த பட்ஜெட்டில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்திற்கு ரூ. *35,163* கோடி ஒதுக்கப்பட்ட நிலையில் இந்த ஆண்டு அதற்கான ஒதுக்கீடு ரூ. *29,653* கோடியாகக் குறைக்கப் பட்டுள்ளது. வீடு கட்டும் திட்டத்திற்கும் நகர்புற வறுமை ஒழிப்பிற்குமான மொத்த பட்ஜெட் ஒதுக்கீடு ரூ. *6,008* கோடியிலிருந்து ரூ. *5,634* கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஆனால் நிதி அமைச்சரோ 'ஏழ்மையைப் பெருமளவு ஒழிப்பதை' நோக்கமாகக் கொண்டுள்ளோம் என்கிறார்!

### உணவுப் பாதுகாப்பு மற்றும் மானியக் குறைப்பு

பாதிக்கப்பட்டிருக்கும் நாட்டுமக்களின் உணவுப் பாதுகாப்பை அரசாங்கம் எப்படி உத்தவாதப் படுத்தப் போகிறது என்பதைப்பற்றி பட்ஜெட்டில் ஒரு வார்த்தைகூட குறிப்பிடப்படவில்லை. நாட்டில் உணவுப் பாதுகாப்பை உத்திரவாதப் படுத்துதை நோக்கமாகக் கொண்டிருப்பதாகக் கூறிக்கொண்டு கோதுமை, அரிசி, மற்றும் தானியங்களின் உற்பத்தியை பெருமளவு அதிகரிப் பதற்காக மத்திய நிதி உதவியுடன் இயங்கும் திட்டமாக *2007* இல் உணவுப் பாதுகாப்பு திட்டம் கொண்டுவரப்பட்டது, ஆனால் அதற்கான நிதியையும் இந்த பட்ஜெட்டில் கிட்டத்தட்ட ரூ *26,000* கோடி அளவிற்கு குறைக்கப்பட்டுவிட்டது. அதோடு, ஒவ்வொரு ஆண்டும் அரசாங்கத்தின் குடோன்களில் உணவுதானியங்கள் பல டன்கள் கெட்டுப்போகின்றன. தேவைப்படும் குடி மக்களுக்கு இவற்றை பகிர்ந்து அளிப்பதற்கு அரசாங்கத்திடம் நிதி இல்லை என்று அரசாங்கம் கூறுகின்றது. ஆனால், இந்த உணர்வு கூட இல்லாமல் நாட்டில் பட்டினியால் இறப்பவர் களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையும் அரசாங்கம் ஈவிரக்கமின்றி வேடிக்கை பார்த்து வருகிறது. இதுபற்றி நிதி அமைச்சர் வாய்திறக்கவே இல்லை.

மானியம் வழங்கும் கேள்விக்கு வருவோம். பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள், சந்தைப் பொருளாதாரத்திற்கு வக்காலத்து வாங்கும் கட்டுரையாளர்கள் ஆகியோர் உணவு, எரிசக்தி, உரம், போன்றவற்றிற்கு மானியம் வழங்குவது வீண் செலவு என்று கூறிக்கொண்டு அவற்றிற்கான மானியங்களை அரசாங்கங்கள் படிப்படியாக விலக்கிக்கொள்ளவேண்டும் என்று தொடர்ச்சியாக ஆலோசனை கூறி, இல்லை வலியுறுத்தியே வருகின்றனர் என்பதை நாம் அறிவோம். ஆனால் கார்ப்பொரேட் துறையினருக்கு பெருவாரியான வரி விலக்குகளையும் மற்ற சலுகைகளையும் அரசாங்கங்கள் வாரி வழங்கும்போது இதே அலோசகர்கள் வருவாய் இழப்பைப் பார்ப்பதே இல்லை. எந்த வகையில் பார்த்தாலும், மானியங்களை ஒட்டுமொத்தமாகக் குறைத்தால் அது கடுமையான மக்கள் கோபத்தை அழைக்கும் என்பதை அரசாங்கம் அறியும். எனவே அதை அவர்கள் படிப்படியாகச் செய்கின்றனர். மானியங்களை பெருமளவில் குறைப்பதை மூடிமறைப்பதற்காக, 'ஒரு நல்ல இலக்கு–நிர்ணயிக்கப்பட்ட மானியம் வழங்கும் அமைப்பு நமக்குத் தேவை. மானியம் ஒழுகிச் செல்வதை நாம் நிறுத்தவேண்டுமே தவிர, மானியத்தையே அல்ல' என்று சாதுர்யமாகக் கூறுகின்றார். வெகுசில கார்ப்பொரேட் நிறுவனங்கள் பெருமளவு வரிச்சலுகைகளிலான மானியங் களைப் பெறுகின்றனர். பெருவாரியான மக்களுக்கு உயிர்வாழ்வதற்காக ஓரளவு மானியங்கள் வழங்கப்பட்டன. எண்ணிக்கை மற்றும் தேவை அளவில் பார்த்தால் பெருவாரியான மக்களுக்கு வழங்கும் மானியம் என்பது சொற்பமே. மானியம் ஒழுகிச் செல்வதை தடுக்க வேண்டும் என்று அவர் குறிப்பிடுவது யாரை? நிச்சயமாக உயிர்வாழ்வதற்காக மானியங்களை எதிர்பார்த்திருக்கும் *99%* சாமானிய மக்களைத் தான்? ஆக அவர் மானியத்தை ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியின் விழுக்காட்டு அளவில் *2.1%* இலிருந்து *1.7%* ஆகக் குறைத்துள்ளார், அதாவது ரூ.*2.60* லட்சம் கோடியிலிருந்து ரூ.*2.44* லட்சம் கோடியாகக் குறைத்துள்ளார். இதுவரை வழங்கப்பட்ட மானியத்திலிருந்து உணவு மற்றும் உரங்களுக்கான மானியங்களுக்கு முறையே ரூ *1744* கோடிகள் மற்றும் ரூ *2001* கோடிகளைக் குறைத்துள்ளார். மானிய ஒழுகல், களவாடப் படுவது ஏன்? அதை யார் எடுத்துக் கொள்கிறார்கள்? முதலாளித்துவ அமைப்பே உருவாக்கி வைத்துள்ள அரசாங்க இயந்திரமும் இடைத்தரகர்களுமேதான், இவர்களை நம்பித்தான் இந்த அமைப்பும் செயல்படுகிறது. தூய்மை இந்தியாவை உருவாக்கவேண்டும் என்று கூறுபவர்கள் இந்தியாவில் பெருமளவில் சுத்தமின்றி இருக்கும் இழிவுகளை தூய்மைப் படுத்துவதற்கு கொஞ்சமும் கவலை கொள்ள வில்லை. அரசாங்கத்தின் செயல்பாட்டுக் களத்தில் நிலவும் இந்த ஓட்டைகளை அடைப்பதற்கும் ஊழலை ஒழிப்பதற்கும் எந்தவொரு முறையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல், அரசாங்கம் மானியத்தை ரத்து செய்வதன் மூலம் அத்தியாவசியப் பொருட்களுக்கு பொது நிதியில் இருந்து மானியம் வழங்கி அவற்றை பொது மக்களுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலையில் கிடைக்கச் செய்யவேண்டிய ஒரு மக்கள் நல அரசின் பொறுப்பை மறுக்கிறது.

இந்த நோக்கத்தோடுதான் சுதந்திரத்திற்குப் பின்னர் மக்களின் நிர்ப்பந்தத்தின் காரணமாக பொது வினியோகத் திட்டத்தை (PDS) அரசாங்கம் அறிமுகப்படுத்தியது. ஆனால் தற்போது இந்தப் பொது வினியோகத் திட்டம் திட்டமிட்டு நீக்கப்படுகிறது, அதோடு தற்போது ஜன் தன் திட்டம் மூலம் பயனாளிகளுக்கு மானியத்தை நேரடியாக அவரவர் வங்கிக்கணக்கிலேயே செலுத்துவது பற்றிப் பேசிவருகிறது. நாட்டில் *70%* மேற்பட்ட மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர், வங்கிக் கணக்கு தொடங்கும் அளவிற்கு பெரும்பாலோனோர் படிக்காதவர்களாக உள்ளனர், இப்படிப்பட்ட நிலையில் இத்திட்டத்தை என்னதான் உரக்கக் கத்தி கூப்பாடு போட்டாலும், அது நடைபெறவே செய்யாது என்று நாம் முன்பே கூறியிருந்தோம். மாறாக, இங்கும் கூட இடைத் தரகர்கள் ஏற்கனவே நுழைவதற்கு அரசாங்கமே வாய்ப்பளித்துவிட்டது. அதுமட்டுமல்ல ஏற்கனவே அரைவயிற்று உணவுக்கே கஷ்டப்படும் கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழைகள் அத்தியாவசியப் பொருட்களை அதிகமான சந்தை விலைக்கு முதலிலேயே வாங்கவே இயலாது, எப்போது அரசாங்கம் தங்களது வங்கிக்கணக்கில் மானியத்தை வழங்கும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கவும் முடியாது. வங்கிக் கணக்கு வைத்துவிட்டாலே ஏழைகளும் ஒன்றுமில்லாத வர்களும் வங்கிகளில் சேமித்து வைக்கும் அளவிற்கு சம்பாதிக்கிறார்கள் என்று அர்த்தமாகாது. அடுத்ததாக, அரசாங்கம் கொடுப்பதாகக் கூறும் மானியம் வங்கியைச் சென்றடையாவிட்டால், காலதாமதமானால் அதைத் தேடுவதற்குரிய சக்தி அவர்களுக்கு இல்லை, அவர்கள் திண்டாடிவிடுவர்.

மேலும் பெட்ரோல், சமையல் எரிவாயு, டீசல், உள்ளிட்ட எரிபொருட்கள் மற்றும் உரங்களுக்கான மானியத்தை ஏற்கனவே குறைத்துவிட்டதால் அவற்றின் விலை அதிகரித்துவிட்டது. தற்போது அவற்றை சந்தை விலைக்கு மானியமில்லாமல் முதலில் வாங்க வேண்டுமெனில் சாதாரண மக்களுக்கு, குறிப்பாக விவசாயிகளுக்கு கடுமையான நிதிச் சுமை ஏற்படும். ஏற்கனவே தாங்கள் உற்பத்தி செய்த விளைபொருட்களுக்கு உரிய விலை இல்லாமல் கடனில் சிக்கி இருப்பவர்களுக்கும் மேலும் நெருக்கடியை உருவாக்கும். ஏற்கனவே கடனில் இருப்பவர்கள் மேலும் கடனாளி ஆவார்கள். அதற்கடுத்து அவர்களால் பொருட்களை வாங்கவே இயலாத சூழலும் உருவாகும். அதிகமாகக் கடன் வாங்கித்தான் இந்த அத்தியாவசியப் பொருட்களை அவர்கள் வாங்க வேண்டிய சூழல் உருவாகும். விவசாயத்தை விட்டே ஓட வேண்டும். நிலங்கள் பறிபோகும். கடன் சுமையால் தற்கொலை செய்துகொள்ளும் நிலை உருவாகும். ஆனால் இதுபற்றியெல்லாம் பொருளாதார மேதைகளுக்கு தெரியாதா? இதுதான் மானியம் கசிவதை அடைக்கும் திட்டமா? ஆக, இவை எல்லாமே மக்களை ஏமாற்றுவதற்கான திட்டங்களே ஆகும். ஊடகங்களில் சமீபத்தில் வெளியிடப்பட்ட புள்ளிவிபரப்படி, ஒரு வருடத்திற்கு சராசரியாக *20,000* விவசாயிகள் தற்கொலை செய்துகொள்கின்றனர். (பர்தமான், *2–3–2015*). ஆனால் இதுபற்றியெல்லாம் பட்ஜெட்டில் கொஞ்சம் கூட கவலை தெரிவிக்கவில்லை.

மற்றொருபுறம், கடுமையாக–உழைக்கும் நமது விவசாயிகளின் முயற்சிகளுக்கு விவசாயப் பண்ணைகள் பின்னாளிருந்து உதவவேண்டும் என்று நிதி அமைச்சர் கூறுகிறார். எனவே அவர் *2015–16* ஆம் ஆண்டில் ரூ. *8.5* லட்சம் கோடி விவசாயக் கடன் வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளார், வங்கிகள் இதை விடக் கூடுதலாக வழங்கும் என்று அவர் அதீத நம்பிக்கையுடன் கூறுகிறார். ஏழை மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு இந்த வங்கிக் கடன்கள் கிடைப்பது மிகவும் அரிதாக உள்ளது என்பதே உண்மை, இந்தக் கடன் கிடைக்காமல் அவர்கள் அதிகப்படியான வட்டியில் தனியார் வட்டிக் கடைக்காரர்களிடம் கடன் பெறுகின்றனர். இந்த விவசாயக் கடன்கள் பணக்கார விவசாயிகள் மற்றும் கிராமப்புற நிலச்சுவாந்தார்களால் விழுங்கப்படுகிறது. எனவே, விவசாயத்தை ஊக்கப்படுத்துவதைப் பற்றி அரசாங்கம் பேசும் போது, அது ஏழை விவசாயிகளை மனதில் வைத்துப் பேசுவதில்லை, மாறாக கிராமப்புற முதலாளித்துவப் பொருளாதாரத்தைக் கட்டுப் படுத்தும் வசதிபடைத்த பணக்கார விவசாயி களையே மனதில் வைத்துப் பேசுகின்றன, வாக்குகளைப் பெறுவதற்காக ஆளும் கட்சிகள் அவர்களைக் கவனிக்கின்றனர்.

### கார்ப்பொரேட்டுகளுக்கு வரிச் சலுகைகள்

கார்ப்பொரேட்டுகளிடமிருந்து வசூலிக்கப்படும் வரி என்பது *23%* மட்டுமே என்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்கிறது, நமது 'உள்நாட்டுக் கம்பெனிகள் மிகவும் போட்டிகரமானவையாக இருக்க வேண்டும்' என்றும் 'விலக்குகள் அளிப்பதால் அது அழுத்தம் தரும் குழுக்களை, சட்டப் பிரச்சினைகளையும் வருவாய் இழப்பையும் ஏற்படுத்தும்' என்று வாதிடும் நிதி அமைச்சர் கார்ப்பொரேட் வரியை *30%* லிருந்து *25%* ஆகக் குறைத்துள்ளார். இது 'அதிக மட்டத்திலான மூலதனத்திற்கு, அதிக வளர்ச்சிக்கு, அதிக வேலைவாய்ப்புகளுக்கு இட்டுச்செல்லும்' என்று அவர் கூறுகிறார். பொய்யும் புரட்டும் உச்சத்தில்! *2014 – 15* இல் இதுவரை பல்வேறு வரிச் சலுகைகள், சுங்க வரிகளில் தளர்வுகள் வாயிலாக ரூ. *5,89,285.2* கோடிகள் அளவிற்கு ஏகபோகக் குழுமங்கள் மற்றும் கார்ப்பொரேட் துறையினருக்கு அரசாங்கம் மானியம் வழங்கியுள்ளது. பற்றாக்குறை பட்ஜெட்டின் அளவே ரூ. *5,55,649* கோடிகளாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ள நிலையில் இந்தத் தொகையானது வருவாய் இழப்பு என்று குறிப்பிடப்படுகிறது, அதோடு அரசாங்கம் பெற்றுள்ள ஒட்டுமொத்தக் கடன் தொகையை விடவும் இந்த வரிச் சலுகைகள் அதிகம் என்றும் கூறப்படுகிறது. ஆனால், இந்த ஊக்குவிக்கப்படும் வளர்ச்சி, அதிகரிக்கப்படும் முதலீடு அல்லது போதுமான வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்கள் போன்றவற்றை எந்த வகையிலாவது நிரந்தரமானவை என்று கருதமுடியுமா? எட்டு கேந்திரமான தொழிற் சாலைகளின் வளர்ச்சி குறைந்துள்ளது என்று சமீபத்தில் தெரியவந்துள்ளது. பிப்ரவரியில் உற்பத்தித் துறை கடந்த *5* மாதங்களில் இல்லாத அளவிற்கு வீழ்ச்சியை சந்தித்துள்ளது. ஜிடிபி யில் *8.3 %* அளவுள்ள திட்டங்களுக்கான முதலீடுகள் 'உறைந்துபோய்' தற்காலிக ஊசலாட்டத்தில்' இருக்கின்றன என்று பொருளாதார ஆய்வறிக்கை ஒப்புக்கொள்கிறது. தனியார் துறையில் நிதி மேலாண்மைத் தரத்தில் ஒரு முழு குழப்பம் நிலவுவதையும் இந்த ஆய்வறிக்கை அம்பலப் படுத்தியுள்ளது. இந்திய கார்ப்பொரேட்டுகளுக்கு வழங்கப்பட்டுள்ள *450* பில்லியன் டாலர்களில் *33 %* (அதாவது ரூ. *8* லட்சத்து *91* ஆயிரம் கோடி) அதற்குரிய வட்டியைக் கூட சம்பாதிக்காத நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே வாராக் கடன்கள், மற்றும் வட்டி வராத சொத்துக்கள் வங்கிகளுக்கு அதிகரித்துவருகிறது. இந்த பாதுகாப்பற்ற சூழலை ஒப்புக்கொள்ளும் நிதி அமைச்சர் சர்வதேச ஒழுங்குமுறைகளுக்கு ஏற்றவகையில் *2018* க்குள் ஜிடிபி யில் *2 %*

தொடர்ச்சி 6ம் பக்கம்

# மக்கள் நலப் பிரச்சினைகளில் ஒன்றைக்கூட இந்த பட்ஜெட் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை

5ம் பக்கத் தொடர்ச்சி

(அதாவது ரூ. 2 லட்சத்து 40 ஆயிரம் கோடி) புதிய முதலீடுகள் இந்திய வங்கிகளுக்குத் தேவை என்று முன்பு கூறியிருந்தார். அதோடு, கார்ப்பொரேட்டுகளிடமிருந்து வரவேண்டிய வாராக் கடன்களால் வங்கிகள் திக்குமுக்காடி செயல்படாத சொத்துக்களை பெருக்கிக் கொண்டிருகின்றன, அதே போல் முடிக்கப்படாத அல்லது தாமதமாகும் திட்டங்களில் ஏராளமான தொகை முடங்கியுள்ளது. நிச்சயமாக, இந்தப் பொது நிதிகளான, வங்கிகளின் நிதி ஏமாற்றப் பட்டதற்கு சாமானிய மக்கள், ஏழைகள், மற்றும் வறியவர்கள் அல்லது கஷ்டப்படும் நடுத்தர வர்க்கத்தினர் காரணமல்ல. முறைகேடான தொழிற்குழுமங்களும் கார்ப்பொரேட் நிறுவனங் களுமே இதற்கான முழுமையான காரணம். அதோடு தற்போது நிதி அமைச்சர் இந்த குற்றமிழைத்தவர்களுக்கு மேலும் மன்னிப்பு வழங்கும் விதமாக அவர்கள் செலுத்தவேண்டிய நேரடி வரியில் **20%** குறைத்துள்ளார். இந்த சலுகைகள் நேரடி வரிவிதிப்பில் ரூ. **8315** கோடி இழப்பை ஏற்படுத்தும் என்று அரசாங்கம் கூறுகிறது. ஆனால் சில ஊடகங்களில் இந்த வரி விலக்கானது ரூ. **62,000** கோடி வருவாய் இழப்பை ஏற்படுத்தும் என்று கூறுகின்றன. (பார்த்மான் **01–03–15**). சொத்து வரியும் ரத்து செய்யப் பட்டுள்ளது. தொழிற்குழுமங்களுக்கும் கார்ப் பொரேட் துறையினருக்கும் இந்த அளவு தாராளமாக பரிசுகளை வாரி வழங்கும் நிலையில் உலகப் பணக்காரர்கள் வரிசையில் முன்னிலை இடம்பெற்றுள்ள இந்தியர்களின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே இருக்கிறது.

### பொதுத்துறைகளின் பங்குகளை விற்றல்

வரிச்சலுகைகளையும் இதர வசதிகளையும் வழங்குவதோடு நிற்காமல் சுதந்திரத்திற்குப் பின்னர் பொதுமக்களின் நிர்ப்பந்தத்தால் பொது நிதியில் உருவாக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களை, நஷ்டத்தில் இயங்குபவைகளை மட்டுமல்லாது லாபத்தில் இயங்குபவை களையும்கூட, பங்கு விலக்கல் கொள்கையின் மூலம் கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுகிறோம் என்ற பெயரில் அவற்றைத் தனியார் முதலாளிகளுக்குத் தாரைவார்ப்பதற்கு மும்முரமாக இருக்கிறது. அரசாங்கத்திடம் இருக்கும் பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு விற்பதன்மூலம் இந்த ஆண்டு ரூ **70,000** கோடி திரட்ட அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளது. பொதுமக்களின் ஒப்புதல் இல்லாமலேயே பொதுச் சொத்தை தனியாருக்கு விற்கும் உரிமையை அரசாங்கம் தானாகவே தன் கையில் எடுத்துக்கொண்டுவிட்டது. இந்த பங்கு விலக்கல் நடைமுறை **1990**களில் காங்கிரஸ் ஆட்சியில் தொடங்கியது. பின்னர் அதைப் பாஜக துரிதமாக முன்னெடுத்துச் சென்றது. ஒருகாலத்தில் பொதுத்துறை நிறுவனங்கள் நாட்டு மக்களுக்கு நல்ல எண்ணிக்கையில் வேலை வாய்ப்புகளை உருவாக்கியது என்பதை நாமறிவோம். தற்போது அவற்றை தனியார் தங்கள்கைகளில் எடுத்துக் கொண்டு, நவீனமயப்படுத்துகிறோம் என்ற பெயரில் ஆட்களைக் குறைத்துவருகின்றனர். தனியார்மயமாக்களில் இந்த அரசாங்கத்தால் குறிவைக்கப்படும் மற்றொரு துறை வெற்றிகரமாக இயங்கிக்கொண்டிருக்கும் பொதுத்துறை வங்கிகள். இப்படியாக உலகமயம்–தனியார்மயம் எனும் நாசகாரக் கொள்கையை இந்த அரசாங்கம் பின்பற்றி மக்களைக் காவுகொடுத்து ஏகபோகங் களுக்கு பெரும் பரிசுகளை வாரி வழங்கி வருகின்றது.

### வரிசெலுத்தும் தனிநபர்களுக்கு எந்த நிவாரணமும் இல்லை

கார்ப்பொரேட்டுகளுக்கு தாராளமாக நன்மைகளை நிதி அமைச்சர் செய்தபோதிலும் வரி செலுத்தும் நடுத்தர வர்க்கத்தினரிடம் மிகவும் கடுமையாக அவர் நடந்துகொண்டுள்ளார். தாங்கள் ஆட்சிக்கு வந்தால் தனிநபர் வரி விலக்குக்கான உச்சவரம்பு ரூ **5,00,000** ஆக நிர்ணயிக்கப்படும் என்று பாஜக தனது தேர்தல் அறிக்கையில் கூறியது. நிதி அமைச்சர் அருண் ஜேட்லியே கூட கடந்த ஏப்ரலில் வரி விதிப்பைக் குறைப்பதற்கு ஆதரவாகப் பேசினார். அதாவது 'வருமான வரி உச்சவரம்பு ரூ. **2** லட்சத்திலிருந்து ரூ. **5** லட்சமாக உயர்த்தப்பட்டால் அதன்மூலம் பொதுமக்கள் ரூ **24** கோடி சேமிக்க முடியும், அது தேசிய வரி நிதியில் **1** முதல் **1.5** விழுக்காடு வரை சிறிய தாக்கத்தை ஏற்படுத்தும்' என்று கூறினார். (எகனாமிக் டைம்ஸ், **20–4–2014**). ஆனால் ஆட்சி அதிகாரத்தில் உட்கார்ந்ததும், அந்த வாக்குறுதிகளை எல்லாம் குப்பையில் போட்டு விட்டனர். தனிநபர்களுக்கான வருமான வரி உச்சவரம்பை நிதி அமைச்சர் உயர்த்தவில்லை. மாறாக, அவர் இரண்டு காப்பீட்டுத் திட்டங்களையும் ஒரு ஓய்வூதியத் திட்டத்தையும் அறிவித்துள்ளதால், அவை எல்லாமே மக்களின் பங்களிப்புடனானவை. எல்லாவற்றிற்கும் மேலாக அவர் வேறு சில முதலீடு செய்யும் இடங்களை குறிப்பிட்டு அதன்மூலம் வரிவிலக்குகளை சில குறிப்பிட்ட விழுக்காடு பெறலாம் என்று குறிப்பிடுகிறார். அதன்பிறகு, 'எனது முந்தைய பட்ஜெட் மற்றும் இந்த பட்ஜெட்டிலும் சேர்த்து நடுத்தர வர்க்க வரி செலுத்துவோருக்கான வரிச்சலுகையை கணக்குப் பார்த்தால், இன்று ஒரு தனிநபருக்கு வரி பயனாக ரூ. **4,44,200** கிடைக்கிறது' என்று சாமர்த்தியமாக அறிவித்துள்ளார். அதாவது, இந்த பெருகிவரும் பணவீக்கம், ஊதியக் குறைப்பு, இன்னும் இதுபோன்ற தடைக் காரணிகளை சந்திக்கும் இந்தக் காலகட்டத்தில் நடுத்தர வரி செலுத்துவோர் தங்களது எல்லா செலவுகளும் போக வரிச் சலுகைகளைப் பெறுவதற்காக பல்வேறு சேமிப்புகள் மற்றும் காப்பீட்டு திட்டங்களில் முதலீடு செய்யும் அளவிற்கு அவர்களிடம் மீதிப் பணம் இருக்கிறது என்று அவர் கூறுகிறார் என்பதே இதன் அர்த்தம். எனவே, அவர்களுக்கு வரிச் சலுகையை நேரடியாக வழங்குவதற்குப் பதிலாக, சேமிப்பு ஆசையைத் தூண்டிவிட்டு அவர்களது பையை துடைத்தெறியப் பார்க்கிறார். வரி செலுத்தும் நடுத்தரவர்க்கத்தின் வருவாயைப் பெருக்கு வதற்கான எந்தத் திட்டமும், அதேபோல் ஏழைகள் மற்றும் விளிம்பு நிலையில் உள்ளவர்கள் ஆதாயமான வேலை செய்வதற்குரிய வழி காட்டுதல்களோ இந்த பட்ஜெட்டில் ஏதும் கூறப்படவில்லை. ஆனால் இவர்களைத்தான் பிரீமியம் செலுத்தி சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் என்று அழைக்கப்படும் திட்டங்களில் சேரவேண்டும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

இரு முரண்பட்ட அணுகுமுறைகள் இருப்பதை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளாது. நிதி அமைச்சரைப் பொறுத்தமட்டில், கார்ப்பொரேட்டுகளும் தொழிற்குழும முதலைகளும் போதிய அளவு வருவாய் ஈட்டவில்லை. எனவே அவர்களுக்கு நேரடி வரிச் சலுகை பெறத் தகுதியானவர்கள். ஆனால் நடுத்தர வர்க்கத்தினர் போதுமான அளவு அதிகமாகவே சம்பாதிக்கின்றனர். எனவே அவர்கள் கையிலுள்ள கூடுதல் பணத்தை சேமிப்பில் செலுத்தி வரிச் சலுகையைப் பெறவேண்டும் என்று அவர் நிர்ப்பந்தப்படுத்துகிறார். இதோடு முடிந்துவிடவில்லை. சேவை வரியையும் அவர் உயர்த்தியுள்ளார். சேவை வரி என்பது ஒவ்வொரு சேவையிலும் விலையை உயர்த்தி அதன்மூலம் இறுதி நுகர்வோரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது என்பதை நாம் இதற்கும் முன்பு பல தருணங்களில் எடுத்துக்காட்டியுள்ளோம். தற்போது செலுத்திவரும் **12.36%** சேவை வரிக்குப் பதிலாக இனி பொது மக்கள் **14%** செலுத்தவேண்டும். தேவைப் பட்டால் **2%** வரை அனைத்து அல்லது சில சேவைகளில் தூய்மை இந்தியா செஸ் வரி விதிப்பேன் என்று நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். அதையும் சாமானிய நுகர்வோர்தான் தாங்கவேண்டும். அதாவது கார்ப்பொரேட்டுகள் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகளாலும், அரசாங்கத்தின் பாராமுகத்தாலும் மாசடைந்த இந்தியாவை சாமானிய மக்கள் சுத்தப்படுத்தவேண்டும். அதற்காக அவர்கள் வரியும் செலுத்தவேண்டும். இதோடு நிற்கவில்லை. நிலக்கரி மீதான செஸ் வரியை ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ. **100** லிருந்து ரூ **200** ஆக உயர்த்தியுள்ளார். இதன்மூலம் மின்கட்டணம் அபரிமிதமாக உயரும். இதனால் சாமானிய மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவர். சாமானிய மனிதர்கள் செலுத்தவேண்டிய மறைமுக வரி மொத்தமாக ரூ. **23,383** கோடி அதிகரிக்கப் பட்டுள்ளது. சுருக்கமாகச் சொன்னால் ஏகபோக முதலாளிகளும் கார்ப்பொரேட்டுகளும் ஏராளமான வரிச் சலுகைகளையும் மற்ற சலுகைகளையும் அனுபவிப்பர், கடினமான பெருமளவிலான பற்றாக்குறை சுமையை சாமானிய மக்கள் சுமந்து முதுகொடியவேண்டும். வரிச் சலுகைகளும் புதிய வரிவிதிப்புகளும் பட்ஜெட்டை தாண்டியும் செல்வது வாடிக்கையாக இருக்கிறது, அதுவும் தொடரும் என்று நிதி அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

### ஏன் காப்பீடு, ஓய்வூதிய நிதி மற்றும் கட்டமைப்பு ஆகியவற்றிற்கு இவ்வளவு வலியுறுத்தல் ?

நாம் மேலே குறிப்பிட்டது போல, அரசாங்கம் மூன்று புதிய காப்பீட்டு மற்றும் ஓய்வூதியத் திட்டங்களைத் துவங்கியுள்ளது, அதில் சேரும்படி மக்களுக்கு ஆசை காட்டி வருகிறது. அதோடு கூடவே, ஏற்கனவே இருக்கின்ற தொழிலாளர் சேம நலநிதி (இபிஎஃப்) திட்டத்திற்குப் பதிலாக புதிய ஓய்வூதியத் திட்டத்தையும், மருத்துவ வசதிக்கு தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்திற்கு (இஎஸ்ஐ) மாற்றாக இன்சூரன்ஸ் ஒழுங்குமுறை வளர்ச்சி அத்தாரிட்டியால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மருத்துவ இன்சூரன்சைத் தேர்வு செய்யும்படியும் தொழிலாளர்களை வற்புறுத்தி வருகிறது. பொத்தாம் பொதுவாகப் பார்த்தால் காப்பீட்டு, ஓய்வூதியத் திட்டங்கள், புதிய மருத்துவ பயன் திட்டங்கள் மூலமாக மக்களுக்கு, குறிப்பாக வயதானவர்களுக்கு, சமூகப் பாதுகாப்பை வழங்க அரசாங்கம் ஆர்வமாக இருப்பது போல் தெரியும். ஆனால் அதற்குப் பின்னால் ஒரு நோக்கம் இருக்கிறது. காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டை **49%** வரை அதிகரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. எனவே, இந்திய சந்தைக்குள் நுழைய பல அந்நிய காப்பீட்டு நிறுவனங்கள் முயற்சிக்கக்கூடும் எனவேதான் இந்த காப்பீட்டு வளையத்தை அதிகரிக்கவேண்டிய அவசியம் எழுகிறது. அடுத்ததாக, புதிய ஓய்வூதியத் திட்டத்தில் பிரதானமாக அந்தத் தொகையை பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்படும், அது திரும்பக் கிடைப்பதற்கான உத்திரவாதமில்லை, அது நிலையில்லாதது, அதுமட்டுமல்ல அங்கே முதலீடு செய்யப்பட்டது சமயத்தில் காணாமலே போவதற்கான வாய்ப்புகளும் உள்ளது. காங்கிரஸ் அரசாங்கம் ஆட்சியில் இருந்தபோது புதிய ஓய்வூதியத் திட்டத்தின்படி ஓய்வூதிய நிதியிலும் **26%** அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிப்பதற்கான ஒரு மசோதா **2012**இல் கொண்டுவரப்பட்டுள்ளது. ஓய்வூதியத் துறையில் **26%** எஃப்டிஐ யை அனுமதிக்கும் திட்டத்திற்கு பாஜகவும் ஒப்புக்கொண்டு விட்டது. அன்றைய காங்கிரஸ் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் ஏற்பாடு செய்த கூட்டத்தில் பாஜக தலைவர்கள் சுஸ்மா சுவராஜ், அருண் ஜேட்லி, மற்றும் யஷ்வந் சின்ஹா ஆகியோர் கட்சியின் முடிவினை அறிவித்தனர். ஓய்வூதிய மசோதா நிறைவேற்றப்பட்டதால் நிதித் துறை சீர்திருத்தங்களை நோக்கிச் செல்லும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஒரு உந்துதல் ஏற்பட்டுள்ளது என்று அரசாங்கம் கூறியது. அமெரிக்காவில் ஓய்வூதியப் பணம் யூக முதலாளித்துவ பங்குச்சந்தையில் முதலீடு செய்யப்படும் பணம் ஓய்வூதியத்திலிருந்து வருகிறது. குவிந்திருக்கும் ஓய்வூதியப் பணத்தை இந்தியாவும் பங்குச் சந்தையில் முதலீடு செய்ய விரும்புகிறது. இதன்மூலம் புதிதாகக் உருவாக்கப் பட்டிருக்கும் ஓய்வூதிய பணத்தை பயன்படுத்திக் கொள்ள, இல்லை கபளீகரம் செய்துகொள்ள, வெளிநாட்டு முதலீட்டாளர்களை சுண்டி இழுக்கின்றனர். எனவேதான் ஏற்கனவே இருக்கக்கூடிய பாதுகாப்பான தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் இஎஸ்ஐ. போன்றவற்றை ஒழித்து விட்டு அதற்குப் பதிலாக புதிய திட்டங்களைக் கொண்டுவர இந்த அளவு அழுத்தம் தரப்படுகிறது.

அதே போல், கட்டமைப்பு மேம்பாட்டிற்கு நிதி அமைச்சர் அதிக முக்கியத்துவம் அளித்து அதற்காக ரூ. **70,000** கோடி ஒதுக்கியுள்ளார். அதோடு பிபிபி (பொது தனியார் கூட்டு), அதாவது தனியார் மயமாக்கும், திட்டத்தை மீண்டும் புத்துணர்வு பெற வைப்பது குறித்து பேசுகிறார். அதற்கும் மேலாக, வீடுகட்டி விற்றல் மற்றும் நில விற்பனை செய்யும் தொழிலிலும் கட்டமைப்புத் தொழிலிலும் உள்ள நிறுவனங்களுக்கு நிதிஉதவி அளிக்கும் போதுமான

தொடர்ச்சி 7ம் பக்கம்

# மத்திய பட்ஜெட் 2015 . . .

6ம் பக்கத் தொடர்ச்சி

முறை இருப்பதாக அவர் உறுதிகூறுகிறார். வெளித்தோற்றத்திற்குப் பார்த்தால், நவீனமயப் படுத்துவதற்கு இது ஒரு தேவையான நடவடிக்கையாகத் தோன்றும், ஆனால் உள்ளே வேறு ஒரு கதை உள்ளது. நாம் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, முதலாளித்துவப் பொருளா தாரம் கடுமையான தீர்க்கமுடியாத சந்தை நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. எனவே, அது உச்சபட்ச லாபத்தை தான் ஈட்டக்கூடிய புதிய புதிய வழிகளை தேடிவருகிறது. அத்தகைய ஒரு பகுதிதான் வீடு கட்டுதல் மற்றும் நிலம் விற்றல் துறையும் கட்டமைப்புத் துறையும். எனவே, பெரும்பாலான உள்நாட்டும் மற்றும் வெளிநாட்டு ஏகபோக நிறுவனங்கள், மிகப்பெரிய வர்த்தக லாபம் அடைவதற்காக அவரவர் கட்டமைப்பு மற்றும் வீடுகட்டும் பிரிவுகளை உருவாக்கி வருகின்றனர். 2014க்கான ரியல் எஸ்டேட் தொழிலுக்கு பொருத்தமான நாடுகளில் முதல் 20 நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது, 5000 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பைக் கொண்டுள்ளது' என்று உலக சொத்து ஆலோசகர் குஷ்மன் வேக்பீல்டு ஒரு அறிக்கையில் தெரிவித் துள்ளார். பொதுமக்களுக்கு, குறிப்பாக ஏழை களுக்கும் ஏதுமில்லாதவர்களுக்கும் உணவு, இருப்பிடம் மற்றும் உடைகளை வழங்க வேண்டிய அரசாங்கம் அந்தப் பொறுப்பை உதறிவிட்டு அதற்கான நிதியையும் கவனத்தையும் இந்தத் துறைக்கு செலுத்துகிறது.

### ராணுவத்திற்கான நிதி ஒதுக்கீடு மேலும் அதிகரித்துள்ளது

பொது நலத்திட்டம், சுகாதாரம், கல்வி, மானியங்களை ரத்து செய்வதும் கார்ப்பொரேட்டு களுக்கும் வசதியானவர்களுக்கும் சலுகைகளை வாரிவழங்குவதுமே பொருளாதார வளர்ச்சிக் கான அத்தியாவசியமானதாகக் காட்டப்படுகின்ற நிலையில், ஆயுத வியாபாரத்தில் பல்வேறு ஊழல்கள் மற்றும் முறைகேடுகளும் நடைபெற்ற போதிலும், உற்பத்திசாரா ராணுவத்திற்கான நிதி ஒதுக்கீடு தொடர்ந்து அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் ராணுவத்திற்கான செலவு ரூ 2,22,370 கோடிகளாக இருக்கக்கூடும் என்று சொல்லப்படுகையில் 2015–16 ஆண்டில் அதற்கான ஒதுக்கீடு ரூ. 2,46,727 கோடிகளாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அதிகரிக்கப் பட்டுள்ள இந்த ஒதுக்கீட்டிற்கு சிறப்பு முக்கியத்துவம் உள்ளது. பாதுகாப்புத் துறையில் ஏற்கனவே 49% அந்நிய நேரடி முதலீட்டிற்கு அரசாங்கம் அனுமதித்துள்ளது. எனவே, வெளிநாட்டை சேர்ந்த, குறிப்பாக அமெரிக்காவைச் சேர்ந்த ஆயுத உற்பத்தி நிறுவனங்கள் இந்திய ஆயுத உற்பத்தித் துறையில் பெரிய அளவில் நுழையை ஆயத்தமாகியுள்ளனர். ஆயுதங்களை அரசாங்கமே விலைக்கு வாங்கிவிடும் என்பதால் பாதுகாப்பு தொழிற்சாலையில் முதலீடு செய்தால் லாபம் உத்திரவாதப்படுத்தப்படும் என்று முன்னணி இந்திய ஏகபோகங்களும் பார்க்கின்றனர். அது போக, லாபகரமான ஏற்றுமதி சந்தையும் இருக்கக்கூடும். கூட்டு வியாபாரத்திற்காக அமெரிக்க ஆயுத உற்பத்தியாளர்களுடன் முன்னணி இந்திய ஏகபோகங்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

இங்கே மற்றொரு விஷயத்தைக் கூற விரும்புகிறோம். தலைசிறந்த மார்க்சிய சிந்தனை யாளரும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயலாளருமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் நெருக்கடியில் சிக்கியிருக்கும் முதலாளித்துவ–ஏகாதிபத்தியப் பொருளாதாரத்தில் பொருளாதாரத்தை ராணுவமயமாக்கல் ஒரு பெரிய அம்சமாக உருவெடுத்துள்ளது என்று நீண்ட காலத்திற்கு முன்பே விளக்கிக் கூறினார். 'மூழ்கும் மனிதன் செத்தையைப் பிடிப்பதுபோல்,... ஏகாதிபத்திய வாதிகள் ... நெருக்கடியிலிருந்து வெளியே வருவதற்காகவும் சந்தை வளர்ச்சியை பாதுகாக்கவும், தற்காலிகமாகவாவது, செயற்கையாக ராணுவ தளவாடங்களை வாங்குவதன் மூலம், நெருக்கடி அதிகரிக்க அதிகரிக்க, மேலும் மேலும் பொருளாதாரத்தை ராணுவமயமாக்குகிறது. (தேர்வு நூல்கள் தொகுதி இரண்டு, பக்கம் 45–46) என்று 1962 லேயே அவர் எடுத்துக்காட்டியுள்ளார். தற்போது இந்தியா ஒரு வலுவான ஏகாதிபத்திய அதிகாரமாக உருவெடுத்துள்ளதோடு மேன்மேலும் பொருளாதாரத்தை ராணுவமயமாக்கும் நோக்கில் சென்றுகொண்டிருக்கிறது. அதற்கு மேலாக காப்பீடு, ஓய்வூதியம், கட்டமைப்பு, மற்றும் ராணுவம் போன்றவற்றில் அந்நிய முதலீடு தாராளமாக நுழைவதற்கு ஏதுவாக வெவ்வேறு வகையான அந்நிய முதலீடுகளுக்கு இடையிலுள்ள வேறுபாடுகளை, குறிப்பாக அந்நிய துறைரீதியிலான முதலீடுகள் மற்றும் அந்நிய நேரடி முதலீடுகளுக்கு இடையில், இருக்கும் வேறுபாடுகளை இல்லாமலாக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

### கறுப்புப் பணம்

தான் பதவி ஏற்ற 100 நாட்களில் வெளிநாட்டில் பதுக்கிவைக்கப்பட்டிருக்கும் கறுப்புப் பணத்தை மீட்டுக் கொண்டுவருவேன் என்று பாஜக பிரதமர் மோடி உத்திரவாதம் அளித்ததை அனைவரும் நினைவில் வைத்திருப்பர். ஆனால் அது வெற்று வேட்டு என்பது ஏற்கனவே நிரூபணமாகி விட்டதோடு இப்படிப்பட்ட போலி வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கி மக்களை ஏமாற்றியதற்காக பல்வேறு தரப்பினரின் விமர்சனத்திற்கும் அரசாங்கம் ஆளாகியுள்ளது. ஆனால் அதற்கு மறுப்பு தெரிவிப்பதற்காக நியாயமாக நாட்டுக்குச் சொந்தமான வளத்தை தேடுவதற்கும் அவற்றை நாட்டிற்கு மீட்டுக் கொண்டு வருவதற்கும் தற்போது சட்டரீதியாக கட்டுப்பாடுகள் உள்ளன' என்று நிதி அமைச்சர் கூறுகிறார். அந்த பற்றாக்குறைகளிலிருந்து விடுபடுவதற்காக, கறுப்புப் பணம் வைத்திருப்பவர்களை வேரறுத்து விடுவது போல் காட்டிக்கொள்ளும் நிதி அமைச்சர் கறுப்புப் பணத்தை தடுப்பதற்கு சில நடவடிக்கைகளையும் அறிவித்துள்ளார். வருவாய் மற்றும் சொத்துக்களை மறைத்தால், வெளிநாட்டு சொத்துக்களை கணக்கில் காட்டாவிட்டால் தண்டனை உள்ளிட்ட நடவடிக்கைகளை அறிவித்துள்ளார்.

கணக்கில் வராத பணத்தை வைத்துக்கொண்டு அவற்றை அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை வெளிநாட்டில் சேர்ந்து வைப்பவர்கள் யார்? ஒன்று அவர்கள் முன்னணி தொழிலதிபர்கள் அல்லது ஊழல் பூர்ஷ்வா அரசியல்வாதிகள் அல்லது உயர் அதிகாரிகள்தான் முறைகேடாகவோ அல்லது சட்டத்தை வளைத்தோ சொத்து சேர்க்கின்றனர். சுவிஸ் வங்கி அதிகாரிகள் வெளியிட்ட சமீபத்திய பட்டியலில் மிகவும் பணக்கார இந்தியத் தொழிலதிபரின் பெயர் முதலாவதாக இடம்பெற்றுள்ளது. இத்தகைய தொழிற்குழுமங்களின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்த கட்சி, முழுக்க ஊழல்மலிந்த நிர்வாகத்தைக் கொண்டிருக்கக்கூடிய கட்சி அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையாவது எடுக்குமா? இவை எல்லாம் மக்களை நம்பவைப்பதற்கான கண்துடைப்பு நாடகம். நாட்டிற்குள் உருவாகும் கறுப்புப் பணத்தை தடுப்பதற்கு கூறப்பட்டுள்ள நடவடிக்கைகள் நகைப்புக்குரியவையாகும். எந்தவொரு அசையாச் சொத்துக்களையும் வாங்கும்போது ரூ 20,000 க்கு மேல் பணமாகக் கொடுப்பதைத் தடுக்கும்விதமாக வருமான வரி சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படும். இதற்கு மேற்பட்ட தொகை பணமாக கைமாறினால் அதை எவ்வாறு அரசாங்கம் அறிந்துகொள்ளும்? பினாமி பெயரில் உள்ள சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்கும் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கும் விதமாக ஒரு புதிய சட்டம் இயற்றப்படும், அதன்மூலம் குறிப்பாக ரியல் எஸ்டேட் தொழிலில் கறுப்புப் பணம் உருவாவதையும் கறுப்புப் பணம் புழங்குவதையும் தடுக்க முடியும் என்று அரசாங்கம் கூறுகின்றது. கறுப்புப் பணம் வைத்திருப்பவர் களைக் கண்டுபிடிப்பதற்கும் அவர்கள் மீது வழக்கு தொடர்வதற்கும் தற்போது இருக்கும் சட்டங்களால் முடியாதா என்ற ஆச்சரியம் நம்மிடம் எழுகிறது. சட்டத்தை இயற்றுவதால் மட்டுமே எல்லாம் முடிந்துவிடும் என்றாகிவிடாது என்பதை நாம் எலோரும் அறிவோம். குற்றவாளி யாராக இருந்தாலும் பாரபட்சமின்றி அவர்களுக்கு எதிராக அந்த சட்டங்களைப் பயன்படுத்தும் வல்லமையும் ஆர்வமுமே நமக்குத் தேவை. ஆனால் நமது முதலாளித்துவ இந்தியாவில் பணக்காரர்கள், செல்வாக்கு மிக்கவர்கள் மற்றும் அதிகாரம் படைத்தவர்கள் என்றால் சட்டம் கண்களை மூடிக்கொள்வதை நாட்டு மக்கள் அனைவரும் தங்களது அனுபவங்கள் மூலம் அறிவர்.

ஒவ்வொரு ஆண்டும் ரூ.28.30 லட்சம் கோடி கறுப்புப் பணம் இந்தியாவில் உருவாவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அதில் பெருமளவு மற்ற நாடுகளில் வரி ஏய்ப்புக்காக குவிக்கப்படுகிறது. சுவிஸ் வங்கியில் மட்டுமே ரூ.80 லட்சம் கோடிகள் அளவிலான கறுப்புப் பணம் இந்தியர்களால் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. இது இந்தியா வெளிநாடுகளிடமிருந்து பெற்றுள்ள கடன் தொகையைவிட 13 அல்லது 14 மடங்கு அதிகம். 2008 முதல் 462 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிலான கறுப்புப் பணம் இந்தியாவிலிருந்து வெளியேறியுள்ளது என்று குளோபல் பைனான்ஸ் இன்டகரிட்டி அறிக்கை தெரிவிக்கிறது. பின்னர் அதே பணம் 'தாராள' என்ஆர்ஐ முதலீடாக அல்லது பங்கு சந்தை முதலீடுகளாக நாட்டிற்குள் மீண்டும் நுழைந்து வெள்ளையாகிறது. கறுப்புப் பணம் உருவாவதும் சட்டவிரோதமாக சொத்துக் குவிப்பதும் செத்துவரும் முதலாளித்துவத்தின் அம்சங்களே, அதோடு முதலாளித்துவத்தை தூக்கியெறியாதவரை அதை தடுக்க முடியாது என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. ஆனாலும்கூட, ஏதேனும் ஒரு அரசாங்கம் நேர்மையாக மக்கள் ஆதரவாக மற்றும் முதலாளித்துவ எதிர்ப்பாகவும் இருந்தால், முறையான நிர்வாக நடவடிக்கைகள் மூலமாகவும் கூடவே சக்திவாய்ந்த மக்கள் இயக்கங்கள் மூலமாகவும் கறுப்புப் பணம் உருவாவதை ஓரளவுக்கேனும் தடுக்க முடியும். ஆனால் ஆளும் முதலாளித்துவத்திற்கு சேவகம் புரிவதில் பற்றுறுதியாகவும் பெரும் பட்ஜெட் பற்றாக் குறையை ஒடுக்கப்பட்ட மக்கள் மீதே தள்ளிவிடும் நோக்கத்தில் பாஜக இருப்பதை பட்ஜெட் தெளிவாகக் காட்டியபிறகும் அப்படிப்பட்ட ஒரு நடவடிக் கையை பாஜகவிடமிருந்து எந்தவகையிலும் எதிர்பார்க்க முடியாது. கறுப்புப் பணத்தை தடுப்பது குறித்துப் பேசும் நிதி அமைச்சர், மக்களை ஏமாற்றுவதற்காக தங்கத்தை பணமாக மாற்றும் திட்டத்தை அறிவித்துள்ளார். அதன்படி தங்கத்தை வங்கியில் சேர்த்து வைத்திருப்பவர்கள் அதற்குரிய வட்டியை தங்களது கணக்கில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அதற்காக வங்கிக் கடன்களும் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவித்துள்ளார். முறைகேடாக தொழில் செய்பவர்கள் மற்றும் வரி ஏய்ப்பவர்களில் பெரும்பாலோனோர் தங்களது சொத்துக்களை தங்கமாகவே வைத்துள்ளனர். தங்கத்தை பணமாக மாற்றும் திட்டம் அவர்கள் தங்கமாக வைத்துள்ள கறுப்புப் பணத்தை வெள்ளையாக மாற்றவே உதவும்.

### ஏமாற்றை அம்பலப்படுத்த வேண்டும்

எனவே ஆளும் பூர்ஷ்வா வர்க்கத்தின் கீழ்ப்படிந்து சேவகம் புரியும் சேவகனான நிதி அமைச்சர் ஆளும் வர்க்கத்திற்கான 'லட்சிய ஆவணத்தையே' பட்ஜெட்டாகத் தாக்கல் செய்திருக்கிறார் என்ற முடிவுக்கே வரலாம். மற்ற எந்த புத்திசாலித்தனமான பூர்ஷ்வா அரசியல்வாதிகளைப் போலவே ஆளும் வர்க்கத்திற்கு தவறாது சேவை செய்து தனது அரசியல் வாழ்க்கையை நடத்திவரும் நிதி அமைச்சர், பிரதமர் மோடியின் நம்பத்தகுந்த படைவீரனாக இருந்து சமர்பித்துள்ள பட்ஜெட்டை சுருக்கமாகச் சொன்னால் அப்பட்டமான முழுக்கமுழுக்க ஏழைகள்–விரோதமானது முதலாளித்துவ–ஆதரவானது எனலாம். உணர்ச்சிபூர்வ பேச்சுக்கள், வெற்று பொருளாதார வார்த்தை ஜாலங்கள் மற்றும் விபரங்களை அள்ளி வீசியபோதிலும் அவற்றால் இந்த யதார்த்த நிலையை மூடிமறைக்க முடியவில்லை. ஆளும் முதலாளிவர்க்கத்திற்கு சேவகம் புரிவது அப்பட்டமாகத் தெரிகிறது. கார்ப்பொரேட்–ஆதரவு என்று தவறாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்று பாதிப்பை சரிக்கட்ட மோடியே பேட்டி கொடுக்க வேண்டியிருந்தது. முதலாளித்துவம் அதற்கே உரிய விதிகளைப் பின்பற்றி அது மேலும் மேலும் நெருக்கடிக்கு ஆளாகி, மிகவும் பிற்போக்குவாத மானதாகவும் குரூர அடக்குமுறையாக மாறி விட்டதால், அதன் அடிவருடி சேவகர்கள் பசு தோல் போர்த்திய புலிகளாக காட்சி தருவதற்கு புதிய புதிய தந்திரங்களைக் கையாளுகின்றனர். ஆளும் பூர்ஷ்வாக்கள் மற்றும் அவர்களது ஏஜெண்டுகளின் இந்த அனைத்து சூழ்ச்சிகளையும் முறியடிப்பதற்காகவும் தங்கள் மீது சவாரி செய்துவிடாமல் இருந்த சிந்திக்கும் மக்கள் தொடர்ந்து கவனமாக இருக்கவேண்டும். எனவே இந்த பட்ஜெட்டின் சீரழிக்கும் முன்மொழிவு களுக்கு எதிராக அனைவரும் எதிர்ப்பு இயக்கத்தில் கிளர்ந்தெழ வேண்டும்.

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : 25th April 2015

# பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2015-17
TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# தேசியவாதக் கருத்துக்களைப் பரப்ப மதத்தை ஒரு வாகனமாக இந்திய தேசியவாதத் தலைமை எடுத்துக் கொண்டது

*2ம் பக்கத் தொடர்ச்சி*

அங்கே மேலாதிக்கம் கொண்ட தேசிய இனம் பிற தேசிய இனத்தை அல்லது இனங்களை அடக்குகிறது. எனவே முதலாளித்துவத்தின் கீழ் மக்கள் பொருளாதாரச் சுரண்டலுக்கு மட்டுமின்றி, தேசிய இன அடக்குமுறைக்கும் ஆளாக்கப்படுகின்றனர். மேற்கத்திய நாடுகளில் தோன்றும் இனக் கலவரங்கள் இப்படிப்பட்ட மேலாதிக்க தேசிய இனம் சிறுபான்மை தேசிய இனத்தை ஒடுக்குவதின் பிரதிபலிப்பேயாகும். முதலாளித்துவம் முன்பு தனது வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் தேசிய ஒருங்கிணைப்பிற்காகவும், ஒரு தேசத்தை உருவாக்குவதற்காகவும், குறிப்பிட்ட பிராந்தியத்தில் வாழும் பல இன மக்களை ஒருங்கிணைக்க முயற்சித்தது. ஆனால் அதுவே தனது வளர்ச்சியின் இன்னொரு கட்டமான ஏகாதிபத்திய கட்டத்தில் மக்களின் எழுச்சிக்கு எதிராக தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கு மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்கவும் முயற்சிக்கிறது. அதன் நெருக்கடி மேலும் தீவிரமடையும்போது முதலாளித்துவத்திற்கு எதிரான உழைக்கும் மக்களின் போராட்டங்கள் மேன்மேலும் உத்வேகம் அடைவதால், முதலாளித்துவம் மேன்மேலும் பாசிச குணாம்சங்களை பெற்று மக்களின் இன மத உணர்வுகளை வெறியாகத்தூண்டி, முதலாளித்துவத்திற்கு எதிரான அவர்களது போராட்டத்தை திசை திருப்ப முயற்சிக்கிறது. இதன் காரணமாகத்தான் மேற்கத்திய பூர்ஷ்வா ஜனநாயக நாடுகளிலும்கூட மதவெறி வாதம், இனவாதம், இனக்கலவர அறிகுறிகள் மேன்மேலும் பெருகி வருவதை நாம் காண்கிறோம். இவ்வாறாக முதலாளித்துவம் இருக்கும் வரை மக்கள் விரோதக் கருத்துக்களான வகுப்புவாதம், சாதியவாதம், இனவாதம், போன்றவற்றிற்கான அடிப்படைக் காரணிகளும் இருந்தே தீரும். இதன் விளைவாக வகுப்புக் கலவரங்களுக்கான அடித்தளமும் இருக்கவே செய்யும். பாட்டாளி வர்க்கத்தால் வழிநடத்தப்பட்டு உழைக்கும் மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றி முதலாளித்துவத்தின் மிச்ச சொச்சங்களையும் துடைத்தெறிந்து ஜனநாயகப் புரட்சியின் அனைத்துக் கடமைகளையும் முற்றிலும் நிறைவேற்றுவதின் மூலம் வெற்றிகரமாக சோசலிஸம் கட்டியமைக்கப்படும்போது மட்டுமே தேசிய இன, வகுப்புவாத அல்லது இனவாதப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படும். எனவே நம் நாட்டின் நலன் கருதி வகுப்புவாதத்தையும் வகுப்புக் கலவரங்களையும், முற்றிலும் ஒழித்துக்கட்ட உண்மையிலேயே விரும்புவோர், சரித்திரம் கற்றுக் கொடுக்கும் இப்போதனையை நினைவில் கொண்டு, முதலாளித்துவத்தை தூக்கியெறிந்து சோசலிசத்தை நிலை நிறுத்துவதற்காக பணியாற்றுவதைத் தவிர வேறு வழி இல்லை...

வகுப்புவாதத்திற்கான மூலகாரணம், நமது நாட்டின் தற்போதைய சமூக பொருளாதார கட்டுமானத்தில் பொதிந்திருக்கிறது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. ஆனால் காரணம் இருக்கிறது என்பதால் மட்டுமே, அனைத்து சூழ்நிலைகளிலும் அதற்குரிய விளைவுகளுக்கு அவை தானாகவே இட்டுச் செல்வதில்லை. காரணத்தை கண்டறிந்து, அதனை முற்றிலும் துடைத்தெறியும் சக்தியை வலுப்படுத்துவதின் மூலம் மனிதனால் அதற்குரிய விளைவுகளை கட்டுப்படுத்தவும், தற்காலிகமாக தடுக்கவும் கூட முடியும். ஆக நம் நாட்டில் வகுப்புவாதத்திற்கு எதிர் சக்தியான ஜனநாயக இயக்கங்களை தொடர்ந்து வலுப்படுத்துவதின் மூலம் மட்டுமே நம்மால் வகுப்புவாதத்தை கட்டுப்படுத்தவும், தற்காலிகமாக வகுப்புவாத வன்முறைகளை தடுக்கவும் முடியும்.

...ஜனநாயக இயக்கத்தின் திட்டங்கள், இதுவரை இருப்பது போன்று பொருளாதார மற்றும் அரசியல் கோரிக்கைகளுக்குள் மட்டும் தன்னை முடக்கிக்கொள்ளக் கூடாது. நம் நாட்டில் இன்றளவும் நிறைவேற்றப்படாமல் இருக்கும் சமூக கலாச்சார புரட்சிகரக் கடமைகளை ஜனநாயக இயக்கத் திட்டங்கள் தன்னுள் கொண்டிருக்க வேண்டும். இக்கடமைகள் நிறைவேற்றப்படாத வரை சமூக, மத முன் அபிப்பிராயங்கள், பண்டைய பழக்கங்கள் மற்றும் அதன் ஸ்தாபனங்கள் போன்ற தளைகளிலிருந்து நம் மக்கள் விடுவிக்கப்படாத வரை மேலும் சமூக மற்றும் கலாச்சார ரீதியில் அவர்களைப் பிளவுபடுத்தும் தடைகளை உடைத்தெறிந்து, அரசியல் ரீதியாக மட்டுமின்றி சமூக மற்றும் கலாச்சார ரீதியாகவும், ஒருமித்த தன்மை கொண்ட இறுக்கமாக பிணைக்கப்பட்ட ஒரு சமுதாயமாக மாற்றி அமைக்கப்படாத வரை வகுப்புவாதம் ஒழிக்கப்பட முடியாது. இந்த இயக்கம் மதத்திற்கு எதிரானது அல்ல என்பதை மீண்டும் நான் வலியுறுத்தவிரும்புகிறேன். இவ்வியக்கம் கடவுள் நம்பிக்கையுள்ள மற்றும் கடவுள் நம்பிக்கையற்ற இரு பாலரும் சுதந்திரமும், சமத்துவமும் கொண்டவர்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மதம் நிச்சயமாகத் தொடர்ந்து இருந்து வருமென்றாலும் அது அரசு விவகாரங்களுக்கு எந்த சம்மந்தமுமின்றி, தனிநபர்களின் சமூக நடவடிக்கைகளில் எந்த செல்வாக்கும் இன்றி தனிநபரின் தனிப்பட்ட விவகாரமாக மட்டுமே இருக்கவேண்டும்.

மதம் என்பதும் மதப்பழக்க வழக்கங்கள் என்ற இவ்விரண்டும் வெவ்வேறானவை. பழக்க வழக்கங்கள் முற்காலத்திலும் மாறின; எதிர் காலத்திலும் கூட சமூக சூழ்நிலைகளுக்கேற்ப மாறியே தீரும். எனவே தற்போது நிலவிவரும் மத பழக்க வழக்கங்களை மாற்றிட போராடும் எவரையும் மதவிரோதி என்றோ, மதத்தை கைவிட்டதாகவோ குற்றம் சுமத்த முடியாது. ...ஜனநாயக இயக்கமானது இன்றைய சமூகத் தேவைகளுக்கு ஒவ்வாத அனைத்துவித மத பழக்க வழக்கங்களுக்கு எதிராக விடாப்பிடியாக நிச்சயமாக போராடும். ஆனால் அது மதத்திற்கு எதிராக அல்ல. நம் நாட்டில், சமூக கலாச்சார புரட்சிகரக் கடமைகளை நிறைவேற்றிட இந்திய முதலாளித்துவ வர்க்கம் திராணியற்று இருக்கிறது. மாபெரும் மனிதன் ஆனாலும் சரி, திறன்மிக்கவரானாலும் சரி தனிநபரால் இக் கடமைகளை நிறைவேற்றிட இயலாது என்பது சொல்லாமலே விளங்கும். எனவே இக்கடமைகளை நிறை வேற்றும் பொறுப்பு இந்திய ஜனநாயக சக்திகளுக்கே உரித்தானதாகும். ஆகையால் இந்த ஜனநாயக இயக்கம் தன்னை நம் நாட்டின் பரந்துபட்ட சக்திகளுடன் அணி சேர்த்துக் கொள்வதோடு தன் திட்டங்களில் அணி சேர்த்துக் கொள்வதோடு தன் திட்டங்களில் சமூக கலாச்சார கடமைகளை நிறைவேற்றுவதற்கான அம்சங்களை இணைத்துக்கொண்டு அரசியல் பொருளாதார கடமைகளை வென்றிட ஜனநாயக சக்திகளின் போராட்டத்தோடு இணைத்துக் கொள்ள வேண்டும். அதோடு மட்டுமின்றி மேலும் முதலாளித்துவத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக போராடிவரும் உழைக்கும் மக்களைத்தான் பிரதானமாக சார்ந்து இருக்க வேண்டும். நம் நாட்டில் சிறுபான்மை சமூக உறுப்பினர்களுக்கான பாதுகாப்பும் உத்தரவாதமும் சரியான புரட்சிகர பாட்டாளி வர்க்க தலைமையின் கீழ் நடைபெறும் வலிமைமிக்க ஜனநாயக இயக்கத்தால் மட்டுமே உறுதிப்படுத்த முடியும்.

நிர்வாக நடவடிக்கைகள் மூலம் மட்டுமே வகுப்புவாதம் மற்றும் வகுப்பு வன்முறையை ஒரு முடிவுக்கு கொண்டுவந்து விடலாம் என்று எண்ணுவது பயனற்றது. ஏனெனில், நம் நாட்டின் நிர்வாக இயந்திரமே சாதாரண காலங்களில் பாரபட்சமாக வகுப்புவாதத்தால் பீடிக்கப்பட்டிருப்பதையும் வகுப்பு கலவர சூழ்நிலையில் அது அதீத வகுப்பு வெறிபிடித்ததாக மாறிவிடுகிறது என்பதையும் யார்தான் அறியார்? அதேபோல் வகுப்புவாதப் பிரச்சினையை தீர்க்கும் கடமையை நம் மக்களிடம் இயைந்து இருக்கிற நற்குணங்களின் பால் விட்டுவிடுவது எந்த பலனும் அளிக்காது. நம் மக்களிடம் நல்லெண்ணத்திற்கு ஒன்றும் பஞ்சமில்லை. ஆனால் வகுப்புவாத காய்ச்சல் தீவிரமாகும் போது அது உதவிக்கு வருவதில்லை. சமூக கலாச்சார புரட்சிகரக் கடமைகள் நிறைவேற்றப்படாதவரை; நமது சமுதாயம் முழுமையாக ஜனநாயக மயப்படுத்தப் படாதவரை; தனிநபரின் சமூக நடவடிக்கைகளில் மதத்திற்கு எந்த செல்வாக்குமின்றி அது முற்றிலும் தனிநபரின் தனிப்பட்ட விஷயம் என்ற நிலைக்கு தள்ளப்படாதவரை; வகுப்புவாதம் வளர்வதற்கான உற்பத்தித் தளம் சிதைக்கப்படாத காலம் வரை இந்நிலையில் இப்படியேதான் இருக்கும்”

## மார்ச் 8 சர்வதேச மகளிர் தினம்




அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கத்தின் சார்பாக மதுரையில் சர்வதேச மகளிர் தினக் கூட்டம் காந்தி மியூசியத்தில் நடைபெற்றது. அதில் டாக்டர் ஆர் முரளி மதுரைக் கல்லூரி முதல்வர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். அதேபோல் சென்னைக் கொருக்குப்பேட்டையில் மார்ச் 15 அன்றும் நெய்வேலியில் மார்ச் 21 ஆம் தேதியன்றும் கூட்டங்கள் நடைபெற்றன.

## மார்ச் 23 பகத்சிங் 84 வது நினைவு நாள்



ஏஐடிஓய்ஓ, ஏஐடிஎஸ்ஓ, ஏஐஎம்எஸ்எஸ் சார்பில் சென்னையில் புகைப்பட மேற்கோள் கண்காட்சி

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் , அலுவலகம்: பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, தூளை, சென்னை 600 112 அச்சகம் : அய்யனார் ஆப்செட் எண் 10, சுப்பாராவ் நகர், தூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our **Website : www.sucic.in**